மின்கதிர்
CITEE
விலை ரூ 5/ ஜூன் 2012




மின்துறையில்
ஒப்பந்த தொழிலாளர்களின் சுரண்டலுக்கு எதிரான
தென்மாநிலங்களின் சிறப்புக் கருத்தரங்கு
13.05.2012/நெல்லூர்




ஏழரையை இழுத்துவிட்ட மன்மோகன் அரசு



## பெட்ரோல் விலைஉயர்வுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் / விளக்கக் கூட்டம்

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின், சென்னை வடக்கு கிளையின் சார்பாக, கொருக்குப்பேட்டை துணை மின்நிலைய வாயிலில் சமீபத்தில் லிட்டருக்கு ரூ. 7.54 வீதம் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ள பெட்ரோல் விலை உயர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் 26.5.2012 அன்று தோழர் செல்வம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் தோழர் து. கோவிந்தராஜு, துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஈ. அந்தோணி, கிளைச் செயலாளர் தோழர் ஜி. மதனகோபால், துணைத் தலைவர் தோழர் ஸ்ரீராமுலு, ஜி. சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியின் துவக்கத்தில் மேதினத்தை குறிக்கும் வகையில் அலுவலக வாயிலில் சங்கத்தின் பொருளாளர் தோழர் து. கோவிந்தராஜு ஏற்றிவைத்தார். முன்னதாக நிகழ்ச்சிக்கு வந்திருந்த தோழர்களை ராமு வரவேற்றார். தோழர் ஜே. வழியுதீன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.



## மதுரை கிளையின் திட்டப்பேரவை

மதுரை புறநகர் கிளையின் 34வது திட்டப் பேரவை 29.4.2012 அன்று உசிலம்பட்டியில் தோழர் எம்.கே. பாந்தே நினைவரங்கத்தில் திட்டத் துணைத் தலைவர் தோழர் ஏ. மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டு கொடியை மத்திய அமைப்பின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான தோழர் எம்.மீனாட்சிசுந்தரம் ஏற்றி வைத்தார். அஞ்சலி தீர்மானத்தை தோழர் சி. செல்வராஜ் முன்மொழிந்தார். தோழர் எம்.சேதுராமன் அனைவரையும்வரவேற்று பேசினார். மத்திய மாநில துணைத் தலைவர் தோழர் ஆர். குருவேல் மாநாட்டில் துவக்கவுரை ஆற்றினார். வேலை அறிக்கையை கிளையின் செயலாளர் தோழர் வீரணன் அவர்களும், நிதிநிலை அறிக்கையை தோழர் ஆர். நாகேந்திரன் அவர்களும் சமர்பித்தார்கள்.

மாநாட்டை வாழ்த்தி மாநிலப்பொருளாளர் து. கோவிந்தராஜு, மதுரை புறநகர் சிஐடியு மாவட்ட செயலாளர் தோழர் டி.ஏ. இளங்கோவன், மின்துறை பொறியாளர் அமைப்பின் திட்டச் செயலாளர் கே.எஸ். மீனாட்சி சுந்தரம், திண்டுக்கல் வட்டக் கிளையின் செயலாளர் தோழர் ஜெ. ஜெயசீலன் ஆகியோர் பேசினார்கள். நிறைவாக மத்திய அமைப்பின் மாநிலப்பொதுச் செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் நிறைவுரை ஆற்றினார்.

### புதிய நிர்வாகிகள்

**சி. செல்வராஜ்**/தலைவர்
**ஏ. வீரணன்**/செயலாளர்
**ஆர். நாகேந்திரன்**/பொருளாளர்

**உப தலைவர்கள்**

ஏ. மனோகரன், பி. ரத்தினம்,
என்.பொன்னழகர்,
ஆர். சுரேஷ்குமார், பி. சோனை,
எஸ். ராமலிங்கம்,
பி. பிரபுகுமார், ஆர். செல்வம்,
எஸ். சரவணன்,

**இணைச் செயலாளர்கள்**

எம். சேதுராமன்,
என். தனபாண்டி, எம். ராபர்ட்,
என். பாலாஜி,
எம். முத்துக்கிருஷ்ணன்,
எஸ். சிக்கந்தர்.

தமிழ்நாடு மின்ஊழியர்
மத்திய அமைப்பின்
மாதஇதழ்
விலை ரூ. 5/-
ஜுன் 2012

**உள்ளே........**


- அண்ணா தி.மு.க அரசின் ஓராண்டு சாதனை
- மத்திய மாநில அரசுகள் மக்கள் மீது தாக்குதல்
- ஒப்பந்த ஊழியர்களின் தென் மாநில சிறப்பு கருத்தரங்கம்
- தமிழ்நாட்டில் தீண்டாமை
- அனல் மின்நிலைய விபத்துகளும் பாதிப்புகளும்
- மஸ்தூரிலிருந்து கள உதவியாளர் பதவி உயர்வு மத்திய அமைப்பிற்கு வெற்றி
- கனவு மெய்ப்பட வேண்டும்
- திசைகாட்டியாய் ஒரு மாநாடு
- தணிக்கைக் குழு அறிக்கை விவசாயிகள் எதிர்ப்பும்


ஆசிரியர் குழு
எஸ்.எஸ். சுப்பிரமணியன் (ஆசிரியர்)
கே. விஜயன்
து. கோவிந்தராஜு
எம்.வெங்கடேசன்
டி. அறிவழகன்
கோ. மோகன்ராஜ்
எம். தனலட்மி

ஆண்டு சந்தா ரூ. 50/-
ஆயுள் சந்தா ரூ. 500/-
தனிப்பிரிதி ரூ. 5/-

முகவரி
27, மருதிதெரு,
சேப்பாக்கம்,சென்னை 5.



# அ.தி.மு.க அரசின் ஓராண்டு ஆட்சியும் மின்வாரிய நிகழ்வுகளும்

2011 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் தமிழகத்தில் மின்சார பற்றாக்குறை என்பது உச்ச நிலை அடைந்து அதனால் தமிழகத்தில் அனைத்து பகுதி மக்களும் பாதிக்கப்பட்டதோடு தொழிற்சாலை சக்கரங்கள் சுழல்வதில் தடை ஏற்பட்டு பொருளாதார வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. இதில் மாற்றம் காண்பதற்கு ஆட்சியில் இருந்த தி.மு.க அரசு எதையும் செய்ய தவறியது.

2011 இரண்டாம் காலாண்டில் தமிழக அரசு தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தலை சந்தித்தது. தேர்தல் பிரச்சார களத்தில் அதிமுகவும், அக்கட்சியின் பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு மின்பற்றாக்குறையை போக்கி மின்சாரத்தில் உபரி மாநிலமாக மாற்றுவோம் என்று தமிழகத்தின் வீதிகளில் ஓங்கி ஒலித்தார்கள். மின்பற்றாக்குறையினால் இன்னலுக்குள்ளான தமிழக மக்களும் மின் வெட்டில் இருந்து மீள்வோம் என்ற ஆசையுடன் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.



தமிழக மக்களின் ஆசியோடு ஆட்சி கட்டிலில் ஏறிய அண்ணா திமுக அரசு மே 16 உடன் ஓராண்டு காலத்தை பூர்த்தி செய்துள்ளது. இந்த ஓராண்டு காலத்தில் மின்பற்றாக்குறை சென்ற ஆட்சியில் இருந்ததை விட மோசமான நிலமை ஏற்பட்டு சென்னை மாநகரத்தில் 1 மணி நேர மின் வெட்டு என்பதற்கு பதிலாக இரண்டு மணி நேரமும், நகர புறங்களில் இரண்டு மணி நேரம் என்பது மூன்று மணி நேரங்களாகவும் கிராமப்புறங்களில் மொத்தமாக 12 மணி நேரத்திற்கும் மேலாக மின் வெட்டு என்பது மக்களை வாட்டி வதைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அதிமுக கட்சி நாங்கள் ஆட்சிக்கு வந்தால் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு கூடுதல் மின் சாரத்தை உற்பத்தி செய்து மின்பற்றாக்குறையை போக்கி மின்வெட்டை தமிழகத்தில் இருந்து விரட்டுவோம் என்று வாக்குறுதி அளித்தவர்கள் கடந்த ஓராண்டு காலத்தில் 127 மெகாவட் மட்டுமே கூடுதல் மின்சார உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார்கள்.

தமிழகத்தில் நிலவும் மின்பற்றாக்குறையை போக்கும் விதமாக அனல் மின் நிலையங்களில் ஒரு காலகட்டத்தில் உச்ச கட்ட உற்பத்தியை உத்தரவாதப்படுத்திய போதிலும் போதிய தளவாட சாமான்களை அளிக்காதது, தேவைப்படும் ஊழியர்களை நியமிக்காதது உள்நாட்டு நிலக்கரிக்கு பதிலாக அயல் நாட்டு நிலக்கரிக்கு முக்கியத்துவம் கொடுத்தது போன்ற நிர்வாக கோளாறுகளினால் தேசிய விருது பெறுகின்ற அளவுக்கு சிறப்பாக செயல்பட்ட மேட்டூர் அனல் மின்நிலையம் இன்று விபத்துக்குள்ளாகி 800 மெகாவாட் மின் உற்பத்தியை இழக்கும் அவல நிலைதான் இந்த ஆட்சியில் ஏற்பட்டுள்ளது.

330 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலையத்தின் 3 அலகுகள் பல மாதங்களாக மூடியே கிடக்கின்றன. இதை சரி செய்து உற்பத்தியை உத்தரவாதப்படுத்த முடியாத அரசாகத்தான் அதிமுக அரசு உள்ளது.

தமிழகத்தில் மின் பற்றாக்குறையை எதிர் கொள்ள புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் நிலையங்களை திட்டமிட்ட காலத்தில் திட்டமிட்ட பணிகளை முடித்து உற்பத்தியை துவங்குவதிலும் வெற்றி காண முடியாத அரசாக தான் உள்ளது. அதாவது வட சென்னை அனல் மின் நிலையத்தின் முதல் அலகு 600 மெகாவாட் மின் நிலையம் 2012 பிப்ரவரியில் உற்பத்தியை துவங்கி இருக்க வேண்டும் ஆனால் அரசு கொடுக்கும் அறிவிப்பில் ஆகஸ்டு மாதத்தில் உற்பத்தியை துவங்கும் என்றும் இரண்டாவது அலகு அக்டோபர் மாதத்தில் உற்பத்தியை துவங்கும் என்று அறிவித்ததிலிருந்தே தமிழக அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத அரசாகத்தான் உள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. அதே போல் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் மூன்றாம் நிலை 600 மெகாவாட் மின் நிலையம் மார்ச் 2012 இல் உற்பத்தியை துவங்கி இருக்க வேண்டும். வள்ளூரில் உள்ள 3X500 மெகாவட் உற்பத்தி திறன் கொண்ட மின்நிலையங்கள் டிசம்பர் 2011, மார்ச் 2012 இல் உற்பத்தியை துவங்கி இருக்க வேண்டும், ஆனால் இவைகள் எல்லாம் எப்போது மின் உற்பத்தியை துவங்கும் என்பதற்கு எந்த வித உத்தரவாதமும் அளிக்க முடியாததுதான் ஓராண்டு கால ஆட்சியின் சாதனையாகும்.

தமிழக மின்பற்றாக்குறையை போக்க மத்திய உற்பத்தி நிலைங்களில் இருந்து தமிழகத்திற்கு பெற வேண்டிய மின்சாரத்தை பெறுவதிலோ, இது தவிர கூடங்குளம் அணுமின் திட்டம், கல்பாக்கம் பி.எப்.பி.ஆர். நெய்வேலி டி.எஸ். 2 விரிவாக்கத்திட்டம் ஆகியவற்றில் இருந்து கூடுதலாக மின்சாரம் தமிழகத்திற்கு கிடைக்கும் என்ற அறிவிப்புக்கள்தான் வருகிறதே தவிர மின்சாரத்தைப் பெறுவதில் வெற்றி காண முடியாததுதான் அதிமுக. அரசின் ஓராண்டு கால சாதனையாகும்.

## அபிரிமிதமான மின்கட்டணத்தை உயர்த்திய ஓராண்டு ஆட்சி

மின்பற்றாக்குறையால் புழுங்கிக் கொண்டு இருக்கின்ற தமிழக மக்களை அபரிமிதமான மின் கட்டண உயர்வு என்ற கொதி நெருப்பில் தமிழக அரசு தள்ளி உள்ளது. அ.தி.மு.க அரசின் ஓராண்டு ஆட்சியில் பேருந்து கட்டணத்தையும், பால்விலை உயர்வையும் அறிவித்ததோடு மட்டுமல்லாமல், சுமார் 8000 கோடி மின் கட்டண உயர்வை அறிவித்து அழகு பார்த்ததுதான் கடந்த ஓராண்டு ஆட்சியின் வேதனையாக அமைந்துள்ளது. தமிழக அரசு அறிவித்த அபரிமிதமான மின் கட்டண உயர்வு என்பது அறிவித்த மின் கட்டண உயர்வில் முதல் கட்டணமாக ரூ.794 கோடிக்கும், விசைத்தறி தொழிலாளர்களுக்கு

ரூ.50 கோடிக்கு மேலும் உயர்த்திய கட்டணத்தை குறைந்ததிலிருந்து அரசு அறிவித்த மின் கட்டண உயர்வு அநியாய உயர்வு என்பதை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலமையிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. இதுதான் அம்மாவின் ஓராண்டு சாதனை. இதுவே தமிழக மக்களுக்கு வேதனை.

**மனித சக்திக்கு மதிப்பளிக்காத ஓராண்டு ஆட்சி**

தமிழக மின் வாரியத்தில் நாளும் உயர்ந்து வரும் மின் நுகர்வோர்கள் அது இந்த ஆண்டு புள்ளிவிவர ஆவணத்தின் படி பார்க்கும் போது மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை 2 கோடியே 32 லட்சத்தை எட்டி மின்சார வாரியத்தின் வருமானம் 23447 கோடியாக உயர்ந்து நிற்கின்ற வாரியமாக உள்ளது. இவ்வாறு உயர்ந்து நிற்கும் மின் நுகர்வோர்களுக்கு சேவை செய்யும் மின் ஊழியர்களின் எண்ணிக்கையோ குறைந்து கொண்டே வரும் அவல நிலைதான் தமிழக மின் வாரியத்தில் நிலவுகிறது. அரசு அளித்த புள்ளி விபரத்திலேயே மின்சார வாரியத்தில் பணி இடங்கள் காலியாக உள்ளதாக கூறுகின்றனர். தமிழக அரசானது சட்டமன்ற கூட்ட தொடர்களில் துறை வாரியாக உள்ள காலி இடங்களை அறிவித்து அதை நிரப்பு வதற்குண்டான நடவடிக்கைகளும் எடுக்கின்ற போது தமிழக மின்சார வாரியத்தில் ஆயிரக்கணக்கான காலி பணி இடங்கள் உள்ள போது சுமார் 600 பொறியாளர்களை மட்டுமே புதியதாக எடுக்க உள்ளதாக அறிவித்துள்ளது. மின்வாரிய ஊழியர்களின் மக்கள் சேவையை தொடந்திட எவ்வாறு உதவிகரமாக இருக்கும் என்பது அரசே பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆட்சியில் உள்ள அரசு தேர்தல் வாக்குறுதியாக சொன்ன பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலி பணி இடங்கள் அனைத்தும் நிரப்பப்படும் என்ற வாக்குறுதி தமிழக மின் வாரியத்தில் கடந்த ஓராண்டு ஆட்சியில் நிறைவேற்றாத வெற்று வாக்குறுதிகளாகவே உள்ளது.

**தளவாட சாமான்கள் பற்றாக்குறை**

தமிழகத்தில் புதிய மின் இணைப்புகளை அளிப்பது ஏற்கனவே உள்ள கட்டமைப்பில் ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு தளவாட சாமான்கள் இன்றியமையாத ஒன்றாகும். சென்ற ஆட்சியில் தேவையான தளவாட சாமான்கள், தேவையான அளவு அளிக்காதத்தினாலேயே ஏற்படும் பழுதுகளை சரி செய்வதிலும், புதிய மின் இணைப்புகள் கொடுப்பதிலும் கால தாமதம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது என்று சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர்கள் வினா எழுப்பிய போது சென்ற ஆட்சியில் ஏற்பட்ட தவற்றை திருத்துவோம் தளவாட சாமான்களை தேவையான அளவு தடையின்றி விநியோகிப்போம் என்று வாக்குறுதி அளித்தவர்கள் நிறைவேற்றாத காரணத்தினால்தான் மேட்டூர் அனல் மின் நிலையம் உள்ளிட்ட விபத்துகளும், விபத்தினால் மனித இழப்புகளும், வருவாய் இழப்புகளும் என்பது தான் தொடர் கதையாக உள்ளது. இதுதான் மின்வாரியத்தில் அ.தி.மு.க. அரசின் ஓராண்டு சாதனையாக (வேதனையாக) உள்ளது.

பொதுவாக தமிழக மின்வாரியத்தில் மின்சார பற்றாக்குறை, மின் கட்டண உயர்வு, போதிய ஆட்களும், தளவாட சாமான்களும் இல்லாத நிலையில் மக்களுக்கு சிறந்த சேவையை செய்ய முடியாத நிலையை உருவாக்கி உள்ளதுதான் அ.தி.மு.க. அரசின் ஓராண்டு சாதனை , அதுவே மக்களுக்கு வேதனை.

அ.தி.மு.க. கட்சி அதன் பொதுச் செயலாளரும் தேர்தல் காலத்தில் எங்களது கட்சி ஆட்சி அமைக்குமானால் தமிழகத்தில் ஊழலை விரட்டியடிப்போம் என்று தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள் அதற்கு முன் தமிழகத்தை ஆண்ட தி.மு.க. அரசு ஊழலின் உறைவிடமாகவும், குடும்ப ஆட்சியாகவும் கோலோச்சிய காரணத்தால் இதில் இருந்து வேறுபட்ட ஒரு நிலையை தமிழகத்தில் உருவாக்க வேண்டுமென்றே அதிமுக கட்சிக்கு மக்கள் வாக்களித்தார்கள், ஆட்சியிலும் அமர்த்தினார்கள். ஆனால், இன்று தமிழக மின்வாரியத்தில் பொருள்கள் கொள்முதல் செய்வதில் இருந்து ஊழியர்களின் பதவி உயர்வு, ஊர்மாற்றம், புதிய ஆட்களை நியமனம் செய்வது போன்றவற்றில் அனைத்தும் ஊழல் தலை விரித்தாடுகிறது. புதிய ஊழியர்கள் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவைகளுக்கு வரையறுக்கப்பட்ட விதிகள் இருந்த போதிலும், அவ்விதிகளை எல்லாம் காற்றிலே பறக்கவிட்டு காசும், கரைவேட்டிகாரர்களுக்கு மட்டுமே இவைகள் சொந்தம் என்ற நிலமையை மின்வாரியத்தில் உருவாக்கி இருப்பதுதான் அதிமுக அரசின் ஓராண்டு சாதனை. அதுவே மின்வாரிய ஊழியர்களுக்கு வேதனை.

- எஸ்.எஸ்.சுப்பிரமணியன்

# மத்திய மாநில அரசுகள் மக்கள் மீது தொடுக்கும் தாக்குதலும் விழிப்படைய வேண்டிய மக்கள் சக்தியும்

எஸ்.எஸ்.எஸ்

மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான திமுகவும் இடம் பெற்றுள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நவீன தாராளமய கொள்கைகளை முழுமையாக அமுலாக்கி வருகிறது. அதனுடைய அம்சமாக உரத்திற்கு அளிக்கப்பட்ட மான்யம் 6000 கோடி ரூபாய் அளவிற்கு வெட்டி குறைத்துள்ளது. நாட்டின் அசைவுக்கு உயிரோட்டமாய் இருக்கும் பெட்ரோலிய பொருள்களுக்கு அளிக்கும் மான்யத்தில் ரூ.25000 கோடியை வெட்டி சுருக்கி உள்ளது. மத்திய அரசின் இந்த நடவடிக்கையால் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளது. யூரியா உரத்தின் விலை 20% உயர்ந்துள்ளது. ஒரு பக்கத்தில் மான்ய குறைவு, மறுபக்கத்தில் இடு பொருள்களின் விலை உயர்வு, விவசாய உற்பத்தி பொருள்களுக்கான நியாய விலை கிடைக்காத தன்மை இந்திய திருநாட்டில் விவசாயம் நட்டத்திற்கு உரிய தொழிலாக மாறியுள்ளது. இதனால் விவசாயிகளின் தற்கொலை 2 லட்சத்து 50 ஆயிரம் பேரை தாண்டியுள்ளது.

உரத்திற்கு, பெட்ரோலிய விலை பொருள்களுக்கும் வெட்டிக்குறைக்கின்ற அரசு கடந்த 20 ஆண்டுகளில் முதலாளிகளுக்கு 21 லட்சம் கோடி சலுகைகளை அளித்து தனது வர்க்கப்பாசத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மத்திய அரசு கடைபிடிக்கும் கொள்கையினால் ஒரு பக்கத்தில் விவசாய பாதிப்பு நிகழ்கின்ற இக்காலத்தில் அகில இந்திய அளவில் வேலை வாய்ப்புகளும் குறைந்து கொண்டே வருகிறது. 2000 - 2005 இல் வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் 2.7 லட்சமாக இருந்தது 2005 - 10 இல் .8 % அளவிற்கு வேலை வாய்ப்பு படு மோசமாக குறைந்துள்ளது இதனால் வேலை இல்லா திண்டாட்டம் இந்திய திருநாட்டில் தலை விரித்தாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

நவீன தராளமய கொள்கை அமுலாக்கம் என்ற பெயரால் உழைப்பாளி மக்களின் ஓய்வூதிய நிதியை தனியாரிடம் ஒப்படைக்க முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. அது மட்டுமல்லாமல் குடிநீர், பாசனநீர், விநியோகத்தை பன்னாட்டு கம்பெனிகளுக்கு தாரைவாக்க தனி முயற்சி மேற்கொண்டுள்ளது. சில்லரை வாணிபம், வங்கி, ஆயுள் காப்பீடு, உயர் கல்வி போன்ற துறைகளில் வெளிநாட்டு கம்பெனிகளை அனுமதித்திட மத்திய அரசு துடியாய் துடிக்கிறது.

மத்திய அரசின் மக்கள் விரோத தொழிலாளர் விரோத தாக்குதலை கட்ட விழத்துவிட்டுள்ள அதே நேரத்தில் தமிழகத்தில் ஆளும் அதிமுக அரசும் ஆட்சிக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள் பேரூந்து கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு என தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றது. வரலாறு காணாத மின் வெட்டை, அகற்றுவதற்கு போதிய நடவடிக்கையை எடுக்காத அதிமுக அரசு தமிழகத்தில் மின் வெட்டை அமல்படுத்துவதால் தமிழகத்தில் தொழில், விவசாயம், நெசவு, சிறு தொழில் என அனைத்து துறைகளும் கடும் பாதிப்பை சந்தித்துக் கொண்டுள்ளது.

தமிழகத்தில் ஆளும் அதிமுக அரசு தொழிலாளர்களின் நியாயமான போராட்டங்களுக்கும் கோரிக்கைகளுக்கும் செவி சாய்ப்பது இல்லை, பன்னாட்டு கம்பெனிகளில் தொழிற் சங்கம் அமைக்கும் உரிமையை கூட நிறைவேற்ற முடியாத அவல நிலைதான் உள்ளது. பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் தனது உரிமைக்காக போராடும் போது அதை நசுக்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு துணை போகும் அரசாகத்தான் தமிழக அரசு உள்ளது.

தமிழகத்தில் சட்டமன்ற ஜனநாயகம்

என்பது கேள்விக்குறியாக மாறி உள்ளது. கருத்து வெளியீட்டுக்கு இடம் அளிக்காமல் சட்டமன்றத்தில் தேவையற்ற விவரங்களுக்கு கூட விதிஎண் 110 க்கான அறிக்கை வாசிப்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது. சட்டமன்றத்தில் எதிர்கட்சியினர் கூறும் விவாதங்களுக்கு வாய்ப்பளிக்காதது எதிர் தரப்பில் கூறும் கருத்துக்களை கேட்பதற்கு கூட ஆளும் கட்சி தயாராக இல்லை என்பதையே காட்டுகிறது.

தமிழகத்தில் அனைத்து துறைகளிலும் லஞ்ச லாவண்யம் என்பது தலை விரித்து ஆடும் நிகழ்வாக மாறி உள்ளது. துறைகளுக்கு தேவையான பொருள்களை கொள் முதல் செய்வதிலிருந்து ஊழியர்களின் அன்றாட பணி விதிகளில் ஆட்சியாளர்கள் தலையிடுவது கையூட்டுகள் மாறிய பின்னரே காரியங்கள் நடக்கும் என்ற நிலைதான் தமிழகத்தில் ஓராண்டு கால ஆட்சியில் சாதனையாக உள்ளது.

மத்திய மாநில அரசுகள் கடைபிடிக்கும் மக்கள் விரோத தொழிலாளர் விரோத கொள்கைகளுக்கு எதிராக மக்கள் அணி திரளவேண்டிய காலமிது. நவீன தாராளமய கொள்கைகளை அமல்படுத்தும் மேலை நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அந்த நெருக்கடியை சாதாரண உழைப்பாளி மக்களின் தலைமீது திணிக்கின்ற விதமாக உழைப்பாளி மக்கள் பெற்று வந்த சலுகைகளை அரசுகள் ரத்து செய்யும் போது அதனை எதிர்த்து லட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராடும் விழிப்புணர்வை பெற்றுள்ளனர் என்பதை நிலை நாட்டும் விதமாகத்தான் பிரிட்டனின் 24 நேர வேலை நிறுத்தம், துறை முகங்கள் மூடப்படுவது நீதிமன்றங்கள், விமான நிலையங்கள் ஸ்தம்பிக்கின்ற அளவிற்கு கருத்தாலும், கரத்தாலும் உழைக்கக்கூடிய உழைப்பாளி மக்கள் வீதியிலே இறங்கி போராடி அரசின் கொள்கைளை பின்னுக்கு தள்ளும் நிகழ்வுகள் இன்றைய நிகழ்வுகளாக நடைபெறுகின்ற போது இந்திய நாட்டு மக்களும் உழைப்பாளிகளும் அரசின் பிற்போக்குத்தனமான கொள்கையால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் போது அந்த தாக்கத்தை உணர்ந்து வீதியிலே இறங்கி போராடச் செய்ய விழிப்புணர்வை உருவாக்குவதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்) மே 15 முதல் 31 வரை நடத்தும் பிரச்சார பேரியக்கமாகும். இந்த விழிப்புணர்வு பேரியகத்தில் மின்வாரிய ஊழியர்களும் திரளாக கலந்து கொள்வோம். வாரீர்

## கணக்கு பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வும் மத்திய அமைப்பின் தலையீடும்

தமிழக மின்வாரியத்தில் வருவாய் பிரிவு தான், வாரியத்தின் வருவாயை முறைப்படுத்துவதும், ஒழுகலை கட்டுப்படுத்துவதும் ஆகும். அப்பிரிவு ஊழியர்களை வைத்து முந்தைய காலங்களில் சில தொழிற்சங்கங்கள் வாரியத்தையே அச்சுறுத்தும் அளவுக்கு செல்வாக்கு செலுத்திய பிரிவாகும். அப்பிரிவில் சுமார் 6000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். இதுவரையில் வருடாவருடம் அந்தந்த பிரிவுகளில் ஏற்படும் காலி இடத்தை பதவி உயர்வு மூலம் நிரப்பி வாரிய செயல்பாட்டை உத்திரவாதப்படுத்துவது வழக்கமாகும். அந்த அடிப்படையில்தான் வருவாய்பிரிவில் ஏற்படும் காலி இடங்களையும் பதவி உயர்வு மூலம் நிரப்பி வந்தனர்.

மின்வாரியம் சிக்கன சீரமைப்பு என்ற பெயரால் வாரியத்தின் அனைத்து பிரிவுகளிலும் உள்ள காலி இடங்களையும் நிரப்புவதில் அக்கறை காட்டாத போக்கு இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக வருவாய் பிரிவில் காலி இடங்களை நிரப்பி கணக்குகளை முறைப்படுத்தி மின் எரிப்பு கணக்கீட்டின் மூலமாக வருகின்ற வருவாயை உத்திரவாதப்படுத்துவதைவிட அப்பிரிவின் செயல்பாட்டில் முறையற்ற நிலைமை நிலவி அதனால் பல கோடி ரூபாய் வருமான ஒழுகல் ஏற்பட்டாலும் கவலை இல்லை. காலி இடங்களை நிரப்பாமல் இருத்தலே சரியென வாரியம் பல ஆண்டுகளாக அந்நிலையை எடுத்துவருகிறது. அதனுடைய உச்சகட்டம்தான் சென்ற ஆண்டு கணக்குப்பிரிவில் ஏற்பட்டுள்ள காலி இடங்களை மற்ற பிரிவுகளில் உள்ள காலி இடங்களை நிரப்ப பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வு வழங்கியதைபோல வருவாய் பிரிவு காலி இடங்களை நிரப்பாத நிலையே எடுத்தது.

வருவாய்பிரிவில் இளநிலை உதவியாளர், கணக்கு உதவியாளர், கணக்கு மேற்பார்வையாளர் பதவிகள் நூற்றுக்கணக்கில் காலி இருந்தும் அதை நிரப்புவதற்கு சென்ற ஆண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2011 ஆம் ஆண்டு வருவாய் பிரிவில் ஏற்பட்ட காலி இடங்களை நிரப்ப பதவி உயர்வு ஏதும் வழங்காததை கணக்கில் கொண்டு கணக்கு பிரிவில் காலி உள்ள இடங்களை சுட்டி காண்பித்து அப்பதவிகளை நிரப்பிட பதவி உயர்வு வழங்குவதற்குண்டான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கடிதம் கொடுத்து வலியுறுத்தியதின் அடிப்படையில் கணக்கு பிரிவிலும் உள்ள காலி இடங்களை நிரப்பிட அனைத்து பதவிகளுக்கும் தகுதிகாண் அறிக்கை கேட்கச்செய்து பதவி உயர்வு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மின் ஊழியர் மத்திய அமைப்பு இதர பகுதி ஊழியர்களின் நலன்களை காக்க என்ன நடவடிக்கை எடுக்கின்றதோ அதை வருவாய் பிரிவு ஊழியர்களுக்கும் விரிவாக்கம் செய்வதே இதன் நோக்கமாகும்.




# மின்துறையில் ஒப்பந்த தொழிலாளர்களின் சுரண்டலுக்கு எதிரான தென் மாநிலங்களின் சிறப்பு கருத்தரங்கு

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு 2 நவீன தாராளமயக் கொள்கையை இந்தியாவில் அமல்படுத்துவதற்கு பாய்ச்சல் வேகத்தில் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதாவது அரசுத் துறையில் மத்திய மாநில பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கையை வெட்டிக் குறைப்பது ஓய்வூதியம் உள்ளிட்ட அவர்கள் பெற்று வரும் சலுகைகளில் கை வைப்பது போன்ற நடவடிக்கை களை எடுத்து வருகிறது.

புதிய பொருளாதார கொள்கை அமலாக்கம் அதன் பாதிப்புகள் மின்சாரத்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்த துவங்கி யுள்ளது. மின்சாரத்துறையில் நிரந்தர தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்து அங்கு ஒப்பந்த தொழிலாளர்கள், தினக்கூலி தொழிலாளர்கள், என்.எம்.ஆர். மற்றும் பிராங்சை சிங் முறையை கையாள்வது என பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது இதனால் ஒப்பந்த தினக்கூலி தொழிலாளர் களின் எண்ணிக்கை இந்திய நாடு முழுவதும் பல லட்சங்களாக உயர்ந்து கொண்டே வருகிறது.

இந்திய நாடு முழுவதும் மின்துறையில் பெருகிவரும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு எந்த சலுகையும் அளிக்கப் படுவதில்லை. இத்துறையில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்ச்சி யாகவும், நிரந்தரத் தொழிலாளர் கள் செய்கின்ற பணியை வாங்கிக் கொண்டு நிரந்தர தொழிலாளர் களுக்கு அளிக்கப்படும் ஊதியம், விடுப்புகள், சீருடை, ஓய்விடம் போன்ற எந்த சலுகைகளும் அளிக்கப்படாமல் உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாக்கப் படுகின்றனர். பல மாநிலங்களில் தினக்கூலி, ஒப்பந்த தொழி லாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர். இவை களுக்கெதிராக இந்திய நாடு முழுவதும் உள்ள தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளிகளை அணி திரட்டுவது என்று இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு முடிவு எடுத்து அம்முடிவை மின்துறை ஒப்பந்த தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக மண்டலம் வாரியான கருத்தரங்குகளை நடத்துவது, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய குறைந்தபட்ச ஊதியம் இதர சலுகைகள் ஆகியவற்றை அவர்கள் மத்தியில் கொண்டு சென்று அப்பகுதி ஊழியர்களை விழிப்படையச் செய்து இந்திய அரசின் பிற்போக்குதனமான கொள்கையோடு மோதச் செய்து அந்த சுரண்டல் கொள்கையை பின்னுக்கு தள்ளுவது என்று முடிவு செய்யப்பட்டது இதை இந்திய மின் ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் விதமாக மண்டல வாரியான கருத்தரங்குகள் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு வடக்கு, வட மேற்கு மாநிலங்களில் அப்படிப்பட்ட கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளது.

இந்திய மின்வாரிய தினக்கூலி, ஒப்பந்த தொழி லாளிகளை அணி திரட்டுவது என்ற அடிப்படையில் ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களில் பணியாற்றும் தினக்கூலி ஒப்பந்த தொழி லாளர்களின் தென் மாநிலங் களின் சிறப்பு கருத்தரங்கு 13.5.2012 அன்று ஆந்திர மாநிலம் நெல்லூரில் நடை பெற்றது. அம்மாநாட்டிற்கு மேற்கூறிய ஐந்து மாநிலங்களில் பணியாற்றும் தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளர்களின் பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.

அந்த சிறப்பு கருத்தரங் கத்திற்கு தமிழகத்திலிருந்து தோழர். டி.கோவிந்தராஜ் அவர்களும் கிரிட் கார்ப்ப ரேஷனில் இருந்து கலந்து

கொண்ட தோழர் அரசு உள்ளிட்ட 5 மாநிலங்களின் தலைவர்கள் தலைமைக் குழுவாக இருந்து செயல்பட ஆந்திர மின்சாரத் தொழிலாளர்களின் தொழிற்சங்க தலைவரான தோழர். சூரியபாபு அவர்கள் வரவேற்புரை ஆற்ற ஆந்திர மாநில சிஐடியூ வின் பொதுச் செயலாளர் தோழர் சுதா பாஸ்கர் அவர்கள் கருத்தரங்கை துவக்கி வைத்தார். இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய தலைவர் தோழர். கே.ஓ.ஹபீப் அவர்களும், பொதுச் செயலாளர் தோழர் பிரசாந்த் நந்தினி சவுத்ரி அவர்களும் இந்திய மின்துறை சந்திக்கும் சவால்கள் அதில் மின்வாரிய ஊழியர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் சம்மந்தமாகவும் எடுத்துரைத்து சிறப்புரை ஆற்றினர்.

இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் பொருளாளர் தோழர். எஸ்.எஸ். சுப்ரமணியம் அவர்கள் தமிழ்நாட்டில் மின் வாரியத்தில் பணியாற்றும் தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளர் களை அணி திரட்டி பல கட்ட இயக்கங்கள் நடத்தி 60,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நிரந்தரம் உள்ளிட்ட பல சலுகைகளை பெற்றுத் தந்த அனுபவத்தை விளக்கியதோடு மட்டுமின்றி அம்மாநாட்டில் ஏற்றப்பட உள்ள தீர்மானத்தை முன் மொழிய 5 மாநில பிரதிநிதிகளும் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிய சுரண்டலுக் கெதிராக மின் வாரிய ஊழியர்கள் அணி திரண்டு போராட வேண்டிய அவசியத்தை விளக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இறுதியாக மின் ஊழியர் கூட்டமைப்பின் பொதுச் செய லாளர் புதிய பொருளாதார கொள்கை அமலாக்கம் என்ற பெயரால் இந்திய மின் துறையில் உழைப்புச் சுரண்டல் அமலாக்கு வதற்கு எதிராக மின் ஊழியர் களை திரட்டும் பணியை இக்கருத்தரங்குகள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருவதை விளக்கிச் சொல்லி, இன்னும் சில மாநிலங்களில் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தி மின் துறையில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களை விழிப் படையச் செய்து இந்தியாவின் தலைநகராம் டெல்லியில் இறுதியாக கருத்தரங்குகளும், பேரணிகளும், நடத்தப்பட உள்ளது. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நடத்தப்படும் இத்தகைய போராட்டத்திற்கு தென் மாநிலங்களில் பணியாற்றும் மின் வாரிய ஊழியர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்ற அறை கூவலையும் விடுத்தார்.

இறுதியாக ஆந்திர மின் வாரிய ஊழியர்களின் ஐக்கிய சங்கத்தின் பொதுச் செயலாளர் (சிஐடியு) தோழர். என். வெங் கடேஸ்வரலு என்ற கிரான் அவர்களின் நன்றியுரையோடு கருத்தரங்கு நிறைவுற்றது.

*எஸ்.எஸ்.எஸ்*

## வீட்டு மின் விநியோகப்பொருள்களில் ஏற்படும் மாற்றங்கள்

இந்திய மின்சார மற்றும் மின்னியல் உற்பத்தியாளர் கழகம் வீடுகளுக்கான மின்சார சாதனங்களை முறைப்படுத்துவது சம்மந்தமாக மத்திய வரவு செலவு ஆண்டு அறிக்கையில் வீட்டு மின் உபயோகப் பொருள்களை முறைப்படுத்துவது சம்மந்தமாக சில அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. மின்சார விநியோகமும், கொண்டு செல்வதும் ஏற்பட்டுள்ள குறைகளால் மின் இணைப்பு சாதனங்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது. இந்நிலை குறிப்பிட்ட நிதி ஆண்டில் வீட்டு மின் உபயோகப் பொருள்களின் உபயோகம் என்பது மிகவும் குறைந்துள்ளது. மின்சார துறையில் மின் உற்பத்திக்கு சிறிது கவனம் செலுத்திய போதிலும், மின்சாரத்தை கொண்டு செல்வதில், விநியோகிப்பதில் ஏற்பட்டுள்ள பாராமுகம் என்பது வீட்டு மின்சார உபயோகசாதனங்களை பயன்படுத்துவதிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் சேவை வரியும், கலால் வரியில் ஏற்படும் மாற்றங்கள் மின் உபயோக சாதன உற்பத்தியில் மற்றும் பயன்பாட்டில் பெறும் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது.

### செய்தி துளிகள்

பாரதப்பிரதமர் திருவாளர். மன்மோகன் சிங் அவர்கள் நிதி நெருக்கடியை சமாளிக்க பலசிக்கன சீரமைப்பு நடவடிக்கைகளை அறிவித்துள்ளதாக செய்திகள் உலவுகின்றன. அதில் பிரதானமாக அமைச்சர்கள், அதிகாரிகள் விமானம் மூலம் வெளிநாட்டு பயன்செய்வதை குறைக்க வேண்டும். உயர்தர ஓட்டல்களில் தங்குவதை தவிர்க்க வேண்டும். இந்த சிக்கன சீரமைப்பு நடவடிக்கைகளை பாரதப்பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்த மறுநாளே அமைச்சர்களுக்கு இணையாக அதிகாரம் படைத்த திட்ட கமிஷன் துணை தலைவர் அலுவாலியா மாண்டக் வெளிநாடுகள் பயணச் செலவு நாள் ஒன்றென்றுக்கு சுமார் 2 லட்சம் ரூபாய் தான் மாதத்தில் 20 நாட்கள் வெளிநாட்டில் சுற்றுவார். இதுதான் மன் மோகன் சிங் அறிவித்த சிக்கன சீரமைப்பா ? அல்லது மன்மோகன் சிங் அறிவித்த சிக்கன சீரமைப்பு அலுவாலியா சிங்க்கு பொருந்தாதோ?

# மின்சாரத் துறையில் ஒப்பந்த, தினக்கூலி என்ற பெயரால் நடக்கும் சுரண்டலுக்கு எதிரான மின்வாரிய தொழிலாளர்களின் தென்மண்டல கருத்தரங்கு

**ஆந்திரா மாநிலஅரசு ஊழியர் இல்லம்,**
**நெல்லூர், ஆந்திர மாநிலம்**

## நகல் தீர்மானம்

இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பில் அங்கம் பெருகின்ற தென் மாநிலங்களில் பணியாற்றும் மின்வாரிய தொழிலாளர்களின் சிறப்பு கருத்தரங்கு நடைபெறுகிறது. ஒப்பந்த, தினக்கூலி, பகுதி நேர ஊழியர்கள் என்ற பெயரால் மின்சாரத்துறையில் நடத்தப்படும் சுரண்டலுக்கு எதிராக இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு திட்டமிடும் நாடு தழுவிய இயக்கத்திற்கு முழு ஆதரவினை இக் கருத்தரங்கு தெரிவிக்கின்றது.

மின்சாரத்துறையில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள பணிகளை வெளியில் விடுவது (பிரான்சைசிங்) ஒப்பந்த முறையில் விநியோக பகுதியில் வருவாய் ஈட்டக்கூடிய தொடர்ந்து செய்யக்கூடிய பணிகளை, அவுட்சோர்சிங், ஒப்பந்த முறை மூலம் செய்வது என்ற நிலையை இக்கருத்தரங்கு கண்டிக்கின்றது. மின்சார சட்டம் 2003ல் உள்ள தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, விதிகளை கண்டிப்பதோடு இச்சட்டம் மின்சாரத்துறை இலாப மீட்டக் கூடிய வாணிப துறையாக மாற்றுவதோடு காலம்காலமாக மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை கணக்கில் கொண்டு செயல்படுவதில் இருந்து மாற்றி மின்சாரத்தை சந்தைப் பொருளாக மாற்றும் விதிகள் உள்ளதை இந்த கருத்தரங்கு கவலையோடு பரிசீலிக்கின்றது.

தென் மாநிலங்களான கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, பாண்டிச்சேரி, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகள் மின்சார துறையில் உள்ள மின் உற்பத்தியாளர்கள், விநியோகிப்பாளர்கள் இந்தியாவில் நடைமுறையில் உள்ள சட்டங்களை மதிக்காத போக்கு குறிப்பாக ஒப்பந்த முறை ஒழுங்குப்படுத்தலும், ரத்து செய்தலும் சட்டம் 1970, குறைந்தபட்ச கூலி சட்டம், தொழிற்சாலை சட்டம், வருங்கால வைப்பு நிதி சட்டம், இ.எஸ்.ஐ. சட்டம் வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், போனஸ் சட்டம், சம்பளபட்டுவாடா சட்டம், பணிக்கொடை சட்டம் ஆகிய சட்ட விதிகளை வேண்டுமென்றே மீறுகின்ற போக்கை இந்த கருத்தரங்கு கவலையோடு பரிசீலிக்கின்றது.

மின்சார உற்பத்தி, மின்சாரத்தை கொண்டு செல்லுதல், விநியோகம் ஆகியவற்றில் ஈடுபடும் தனியார் நிறுவங்கள் எந்த வித பாதுகாப்பு விதிகளையும் பின்பற்றாததோடு, தொழில் ரீதியாக தொழிலாளர்களின் உடல் நலன் காக்கும் செயல் எதையும் பின்பற்றுவது கிடையாது அரசின் இந்த அடாவடியான நடவடிக்கைகளுக்கு எதிராக மின்வாரிய தொழிலாளர்களும் அவர்களை தலைமை தாங்கும் அமைப்புகளும் ஒன்றுபட்டு போராட இந்த கருத்தரங்கு அறை கூவி அழைக்கின்றது.

மின்வாரிய ஊழியர்களின் கீழ்கண்ட கோரிக்கைகளை தீர்த்து வைக்க அரசு, மின்வாரிய நிறுவனங்களை நிர்பந்திக்கும் போராட்டங்களை முன்னின்று நடத்த இந்த கருத்தரங்கு ஏகமனதாக தீர்மானிக்கிறது.

- சமூக பொருளாதார வளர்ச்சி, சமுதாயத்தின் விரிவடைந்த பிரிவினருக்கு மின்சாரத்தை அளிப்பது, மக்கள் விரோத, தொழிலாளர் விரோத சரத்துக்களை உள்ளடக்கிய மின்சார சட்டம் 2003 இல் உரிய மாற்றங்களை செய்வது.
- நிரந்தர தன்மை வாய்ந்த, தொடர்ச்சியான பணிகளில் ஒப்பந்த முறையை தடைசெய்வது அப்பகுதியில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளிகளை பணி நிரந்தரம் செய்யும் வரையில் அப்பகுதியில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு அந்த துறையில் உள்ள நிரந்தர தொழிலாளிகளுக்கு அளிக்கப்படும் ஊதியத்தை அளிப்பது.
- மின்சாரத்துறையில் வெளியாட்கள் மூலம் வேலை வாங்குவது, அவுட்சோர்சிங், காண்ட்ராக்ட் முறைகளை தடுத்து நிறுத்துவது.

- மின்வாரிய பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு மாதத்திற்கு குறைந்தபட்சமாக ரூ. 10,000த்தை உறுதிப்படுத்தும் வகையில் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்து மாதத்திற்கு ரூ. 10,000த்தை உடனடியாக வழங்குவது.
- தேசிய மின் உற்பத்திக்கான ஆதாரங்கள் மீது தேசிய அளவில் கட்டுப்பாடும், முறைப்படுத்துவதும் உத்தரவாதப்படுத்துவது, அணு மின் உற்பத்திக்கு வெளி ஆதாரங்களை சார்ந்திருப்பதை நிறுத்துவது. அணுமின் உற்பத்தியில் உள்நாட்டு கண்டுபிடிப்புகளின் ஆதாரங்களை முழுமையாக பயன்படுத்தும் வகையில் ஆராய்ச்சி, அபிவிருத்தி பிரிவை உத்தரவாதப்படுத்துவது.
- அனைத்து தொழிலாளர் நலச்சட்டங்கள், பாதுகாப்பு விதிகள், தொழில் சார்ந்த உடல் பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு விதிகள் அனைத்தையும் மின்சார நிறுவனங்கள் முழுமையாக அமல்படுத்தச் செய்வது.
- நாடு முழுவதும் உள்ள உழைப்பாளி மக்கள், மின்வாரிய ஊழியர்களின் நலன்களை பாதுகாக்கும் அனைத்து விதமான சுயேட்சையான அகில இந்திய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் இந்த கருத்தரங்கு நல் ஆதரவை நல்குகிறது.

தீர்மானத்தை முன்மொழிபவர் : எஸ்.எஸ். சுப்ரமணியன்/பொதுச் செயலாளர்/COTEE

தீர்மானத்தை வழிமொழிபவர் : து. கோவிந்தராஜு/பொருளாளர்/COTEE

## சங்கரன் கோவில் இடைத் தேர்தலுக்கு பிறகு தமிழக முதல்வர் கூடங்குளம் அணுமின் நிலைத்திற்கு ஓ.கே

பாதுகாப்பு என்ற பெயரில் கூடங்கும் அணு மின்நிலைய பணிகள் பல மாதங்களாக முடங்கி கிடந்ததை 19.3.2012 அன்று தமிழக அரசு கூடங்குள அணுமின் நிலைய பணிகளை தொடர்ந்து நடத்த ஒப்புதல் அளித்தது. இந்த மின் திட்டம் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டு வந்த காரணத்தால் தேர்தல் முடிந்த மறுநாள் அணுமின் பணிகளை துவக்க தமிழக அரசு அனுமதி அளித்தது. போராட்ட காரர்களை அமைதிபடுத்தும் விதமாக அந்த பகுதியில் வீடுகள் கட்ட சாலைகள் அமைக்க, மீனவர்களுக்கு குளிர் சாதன கிடங்குகள் அமைக்க ரூ.500/- கோடி ஒதுக்கீடு செய்தது. பின்னர் இந்திய-ரஸ்யா வின் கூட்டு திட்டத்தை வேகமாக செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாண்பு மிகு முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்கள். இந்த அறிவிப்பானது மின் பற்றாக்குறையால் தத்தளிக்கும் தமிழ்நாட்டிற்கு உதவியாக அமைந்ததோடு மட்டுமல்லாமல், மத்திய அரசு இத்திட்டத்தை முடிப்பதற்கும் உதவிகரமாக அமைந்தது.

## ஐரோப்பிய நாடுகளில் அரசு, தொழிற்சாலைகளில் விடுமுறை நாட்கள் குறைப்பு

கடந்த 2008 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உலக நாடுகளையே முற்றிலும் முடங்கும் வண்ணம் இருந்தது. இதன் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதனை சமாளிக்க அந்த நாடுகள், ஆட குறைப்பு, சம்பள குறைப்பு, ஓய்வூதியம் குறைப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

தற்போது ஐரோப்பிய யூனியனில் உள்ள போர்ச்சுக்கல் நாட்டில் பொது விடுமுறைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதில் குடியரசு தினம், சுதந்திர தினம், அனைத்து புனித தினம் உள்ளிட்ட 4 விடுமுறை நாட்கள் குறைக்கப்பட்டு வேலை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு தினங்கள் கத்தோலிக்க வழிப்பாட்டு தினமாக கருதப்படுகிறது. இத்தினத்தை வேலை நாட்களாக மாற்ற வாட்டிகன் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளதிலிருந்து பொருளாதார வேகத் தன்மையை புரிந்து கொள்ள முடியும்.



# அனல் மின்நிலைய விபத்துகளும் பாதிப்புகளும்

காண்டீபன்

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து தமிழக மக்களை அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது. கடுமையான மின்வெட்டு இருக்கும் நேரத்தில் தமிழகத்திற்கு வரவேண்டிய மின்சாரத்தில் 840 மெகாவாட் இல்லாமல் போனால் மின்வெட்டு மேலும் கடுமையாகும் அல்லவா? ஏற்கனவே 3500 மெகாவாட் மின்சார பற்றாக்குறையுடன் சேர்ந்து 4500 மெகாவாட் மின்சார பற்றாகுறை நீடிக்கும். இந்த சிரமத்தை நீக்குவதற்கு ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மேட்டூர் அனல் மின் நிலையம் இந்தியாவில் உள்ள அனல் மின்நிலையங்களில் சிறந்த அனல் மின் நிலையம், மின் உற்பத்தியில் பல சாதனைகளை படைத்துள்ளது. மின் உற்பத்தி செலவானது இதர மின் நிலையங் களை விட குறைவானது. ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை வைத்துக் கொள்ளாமல் பணியில் உள்ள நிரந்தர தொழிலாளர்கள், பொறியாளர்களைக் கொண்டே சிறப்பான முறையில் பணியாற்றி, வெள்ளி விழா கொண்டாடும் நேரத்தில் இப்படி ஒரு விபத்து ஏற்பட்டது கவலைக்குரிய ஒன்றுதான்.

அதுவும் விபத்து ஏற்படும் வாய்ப்பு குறைவாக உள்ள இடத்தில் விபத்து நடை பெற்றுள்ளது. அதற்கு காரணம் பல்வேறு அம்சங்களுடன் மத்திய அரசின் நிலக்கரி ஒதுக்கீடு கொள்கையும் காரணமாக அமைந் துள்ளது. விபத்து மே மாதம் 9 ஆம் தேதியன்று 160 அடி உயரத்தில் உள்ள பங்கர் டாப்பில் இரவில் நடைபெற்றுள்ளது.

நான்கு 210 மெகாவாட் மின்நிலைங்களுக்கும் உண்டான பங்கரில் நிலக்கரியை கன்வேயர் பெல்ட் மூலம் நிரப்பும் பணி நடைபெறும் நேரத்தில் தான் விபத்து நடைபெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கள உதவியாளர் நல்லதம்பி விபத்தில் இறந்து விட்டார். ஒரு பொறியாளர் உட்பட சிலருக்கு தீக்காயம் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தீ விபத்துக்கான நெருப்பு எங்கிருந்து வந்தது என்பதற்கான தடயங்களே இல்லாததும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

விசாரணையில் முழுமை யான விபரங்கள் கிடைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. தீ விபத்தில் புதியதாக மாற்றப்பட்ட கன்வேயர் பெல்ட்டுடன் நிலக்கரியும் சேர்த்து எரிந்து கன்வேயர் பெல்ட்டைத் தாங்கும் அமைப்பு முழுவதும் தீக்கிரையாகி விட்டது.

புதியதாக கன்வேயர் பெல்ட்டைத் தாங்கும் அமைப்பை உருவாக்குவதற்கு ஒரு மாதம் ஆகும் என்று அரசுத் தரப்பில் கூறப்படுகிறது. இதனால் ஏற்படும் நஷ்டம், பொருள் சேதாரம் சில கோடிகள் என்றாலும் மின் உற்பத்தி இல்லாமல் போனதால் ஏற்படும் இழப்பு தினம் 6 கோடியிலிருந்து 8 கோடி ரூபாய் இருக்கலாம்.

அனல் மின்நிலையங் களுக்கு தேவையான நிலக்கரியை இந்திய நிலக்கரி நிறுவனம்தான் வழங்கி வருகிறது. நமது தமிழக மின்வாரியத்தின் அனல் மின் நிலையங்கள் இந்திய நிலக்கரிக்கு ஏற்ற முறையில்தான் அதன் கொதிகலன் அமைக்கப் பட்டுள்ளது. இந்திய நிலக்கரி நிறுவனம் வழங்கும் நிலக்கரி வெப்பசக்தி குறைவானது. சேமித்து வைக்கும் இடத்தில் தானாக எரியும் தன்மை அதற்கு இல்லை.

இந்திய நிலக்கரி நிறு வனம் போதுமான நிலக்கரியை நமக்கு வழங்காத காரணத்தினால் தமிழக மின்வாரியம் ஆண்டு தோறும் 15 லட்சம் டன் நிலக் கரியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறது.

இந்திய நிலக்கரி ஒரு டன் ரூ.500, சரக்கு கட்டணம் 1300 ஆக ஒரு டனுக்கு ரூ.1800 என்றால், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி

செய்யும் நிலக்கரி ஒரு டன் ரூ.8000க்கு மேல் விலை ஆகிறது. இந்த ஆண்டு மேலும் மோசமான நிலைமை. டான்ஜெட்கோ அதிக மான அளவில் நிலக்கரி இறக்குமதி செய்துள்ளது.

இந்த நிலக்கரி இந்திய நிலக்கரி போன்று குறைந்த வெப்பச்சக்தி இல்லாமல் அதிக வெப்ப சக்தி திறன் கொண்டது. இதன் காரணமாக வெளிநாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியை நமது இந்திய நிலக் கரியுடன் கலந்துதான் பயன் படுத்தப்படுகிறது. தனியாக வெளிநாட்டு கரியை மட்டும் பயன்படுத்தினால் கரியின் அதிக வெப்பதிறனால் கொதிகலன் குழாய்கள் பாதிக்கப்பட்டுவிடும்.

இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி சேமித்து வைக்கப்பட்ட இடத்தில் தானாகவே எரியும் திறன் கொண்டது. ஆகவே நிலக்கரி எரிவதை தடுத்திட தண்ணீர் பீச்சி அடித்து நெருப்பை அணைப் பார்கள். ஆனால் பெரும் குவி யலாக உள்ளதில் நெருப்பை கண்டு பிடித்து அணைப்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். பல்வேறு சிரமங்கள் இருந்தாலும் புகையும் நிலக்கரியின் நெருப்பை அணைத்த பிறகே கன்வேயர் பெல்ட்டில் அனுப்பவேண்டும்.

மேலும் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி கடினத்தன்மை இல்லாததால் எளிதில் பவுடர் ஆகிவிடும் தன்மை கொண்டது. அதிக தண்ணீர் அடித்தால் நிலக்கரியை கையாளுவதும் கடினமான ஒன்றாகிவிடும். ஆக நிலக் கரியானது தமிழகத்தில் உள்ள நான்கு அனல் மின் நிலையங் களிலும் சேமித்து வைக்கப்பட்ட இடங்களில் புகைந்து கொண்டு தான் இருக்கிறது.

சேமித்து வைக்கும் பொழுது தீ பிடிக்காமல் இருக்க விதிமுறைகள் இருக்கிறது. அவை பின்பற்றப்படாமல் இருக்கலாம். சேமித்து வைக்க வேண்டு மென்றால் இடம் அதிகமாக தேவையாகும். புல்டோசரைக் கொண்டு காற்று புகாமல் நிலக்கரியை மிதித்து அழுத்தம் கொடுக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக சேமித்து வைப்பதும் கூட விபத்து நடக்க காரணமாய் விடுகிறது. அதே போன்று சில அதிகாரிகளின் பாராமுகமும் காரணமாக இருக்கலாம்.

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கும் இறக்குமதி செய் யப்பட்ட நிலக்கரி பயன்படுத்தப் படுகிறது. இறக்குமதி செய்யப் பட்ட நிலக்கரியை பயன்படுத்த வேண்டிய விதிமுறைகளை பின் பற்றினார்களா? அதிகாரிகளுக்கே வெளிச்சம்.

மத்திய அரசின் நிறுவன மான நிலக்கரி நிறுவனம் நமது அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை வழங்கி யிருந்தால், வெளிநாட்டு நிலக் கரியை பயன்படுத்த வேண்டியி ருந்திருக்காது. விபத்தை தவிர்ப் பதற்கான சாத்தியக்கூறுகள் இருந்திருக்கலாம். மின் உற்பத்தி இழப்பு ஏற்பட்டு மக்கள் அவதிப் பட வேண்டிய சூழல் இருக்காது.

மற்றுமொரு விபத்தையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத் தமாக இருக்கும். தமிழகத்தில் உள்ள குத்தாலம் எரிவாயு சுழலி மின் நிலையம். அதன் மின்திறன் 92 மெகாவாட் ஆகும்.

2006 ஆம் ஆண்டு நவம் பரில் ஏற்பட்ட ஒரு விபத்து. ஒரு வருட மின் உற்பத்தி இழப்பு. விபத்திற்கான காரணம் சாதா ரணமானது. சுழலியின் பேரிங் கிற்கு செல்லும் உயவு எண் ணெய்யைக் கட்டுப்படுத்தும் தானியங்கி கருவிக்குத் தேவை யான மின்சாரத்தை ஒரு மின்கலம் (பேட்டரி) செய்து வந்தது. மின்கலம் செயலிழந்து போனதால் உயவு எண்ணெய் சுழலியின் பேரிங்கிற்கு செல்லுவது நின்று போனது. உயவு எண்ணெய் இல்லாமையால் பேரிங் செயலி ழந்து போய் மின் உற்பத்தி நின்று விட்டது.

2008 ஆம் ஆண்டு ஜனவரியில் தான் இது சரி செய்யப்பட்டது. ஆன செலவு 58 கோடி ரூபாய், மின் உற்பத்தி இழப்பு ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் ஆகும். விபத்திற்கான மின்கலத்தின் விலை எவ்வளவு இருக்கும. 10,000 ரூபாய் இருக்கலாம்.

வழுதூர் எரிவாயு மின் நிலையத்தில் இரண்டாவது கட்ட மின் நிலையம் ஆரவாரமாக 2008 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப் பட்டது. அதன் மின் திறன் 92 மெகாவாட் ஆகும்.

திறந்து வைத்தவர் திமுகவின் ஆட்சியில் மின்துறை அமைச்சராக இருந்தவர், மின் நிலையத்தை கட்டி முடித்து இயக்கி கொண்டுக்க வேண்டியது ஒப்பந்தம் எடுத்துள்ள தமிழகத்தை தலைமையிடமாகக் கொண்ட பிஜிஆர் எலக்டரிக் கம்பெனி யாகும். ஒரு மாதம் கூட தனது முழுமையான திறனை இந்த மின் நிலையம் அளிக்கவில்லை மட்டுமல்ல, உடனே பழுதும் ஆகிவிட்டது.

யார் பழுது பார்ப்பது என்பதில் முடிவெடுக்க முடியாத சிக்கல். விளைவு, ஒரு வருட உற்பத்தி இழப்பு, செலவு ஒரு பகுதி என்றால் மின் உற்பத்தி இழப்பு தினம் ஒரு கோடி ரூபாய் ஆகும். 2010 ஆம் ஆண்டில் தான் உற்பத்தியை இம்மின்நிலையம் துவங்கியது.

காடம்பாறையில் உள்ள நீர் மின் நிலையம் 4 X 100 மெகாவாட் மின் திறன் கொண்டதில் ஒரு மின் நிலையம் கடந்த ஆறு மாத காலமாக பழுதாகி கிடக்கிறது. பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில் என்ன

சிக்கல் என்று விளங்கவில்லை. இதனால் மின் தேவை உச்சகட்ட நேரத்தில் 100 மெகாவாட் மின் உற்பத்தி இல்லாமல் உள்ளது. மலைப் பகுதி என்பதால் யார் கண்ணிற்கும் இது பட வில்லை போலும்.

இப்படி சாதாரண பிரச் சனைகளினால் ஏற்படும் மின் விபத்துக்களினாலும் திறன்மிக்க முடிவுகளை எடுக்காத சில அதிகாரிகளாலும் சில அதிகாரி களின் ஊழல் நடவடிக்கைகளும் ஊழியர்களுக்கு செய்து தர வேண்டிய சிறிய வசதிகளைக் கூட செய்து தராத காரணத்தினாலும் மின்வாரியம் கடுமையான நஷ்டங் களை சந்தித்துக்கொண்டு வருகின்றது.

இதனால் ஏற்படும் மின் உற்பத்தி பாதிப்பபினால் மக்களும் அவதிக்குள்ளாக வேண்யுள்ளது. மத்திய அரசின் தாராளமயக் கொள்கைகளின் விளைவாக நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டது.

அதனால் வெளிநாட்டு நிலக்கரியை நாடவேண்டிய தாயிற்று. இல்லையென்றால் வெளிநாட்டு கரியை இறக்குமதி செய்து அவதிப்பட வேண்டிய அவசியமில்லை.

**கடைசி செய்தி**

மேட்டூர் அனல்மின்நிலையம் விபத்து நிகழ்விலிருந்து சீரமைக்கப் பட்டு 28.5.2012 காலை 8.31 மணிக்கு முதல் மின் உற்பத்தியை துவங்கி உள்ளது. பணியை விரைவாக முடித்த ஊழியர்களுக்கு, ஒப்பந்த தொழி லாளர்களுக்கு வாரியத் தலை வருக்கு தமிழக முதலமைச்சர் பாராட்டுதலை தெரிவித்துள்ளார்.

## விருதுநகர் திட்டப்பேரவை

விருதுநகர் கிளையின் 23வது திட்டப் பேரவை 20.5.2012 அன்று ராஜபாளையம், சமூசிகாபுரம் தோழர் து. ஜானகிராமன் நினைவரங்கத்தில் நடைபெற்றது. பேரவைக்கு கிளையின் தலைவர் தோழர் எஸ். தங்கராஜ் தலைமை தாங்கினார். மாநாட்டின் கொடியை மூத்த தோழர் ஜி. ஆழ்வார் ஏற்றி வைத்தார். அஞ்சலி தீர்மானத்தை வரவேற்புக்குழு செயலாளர் தோழர் எம். நாச்சியப்பன் முன்மொழிந்தார். தோழர் எம். சக்திவேல் அனைவரையும் வரவேற்று பேசினார்.

சிஐடியு சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் எம். அசோகன் பேரவையில் துவக்கவுரை ஆற்றினார். கிளையின் செயலாளர் தோழர் ஜி. பெருமாள்சாமி வேலை அறிக்கையையும், தோழர் எஸ். சேர்வை நிதிநிலை அறிக்கையையும் முன்மொழிந்தார்கள். மாநாட்டை வாழ்த்தி மத்திய அமைப்பின் மாநிலத் துணைத் தலைவர் தோழர் எஸ். முத்துக்குமாரசாமி, தோழர் வை. பாலசுப்பிரமணியன், சிஐடியு மாவட்டசெயலாளர் ஆர். முத்து வேல், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர் சங்க மாநில செயலாளர் தோழர் ஜி. வேலுச்சாமி ஆகியோர் பேசினர்.

நிறைவாக மத்திய அமைப்பின் மாநில பொருளாளர் தோழர் து. கோவிந்தராஜு நிறைவுரை ஆற்றினார். பேரவையில் விருதுநகர் திட்ட மேற்பார்வை மின்பொறியாளரின் தொழிற் சங்க விரோத நடவடிக்கையை கண்டித்தும், தற்காலிக பணிநீக்கம்செய்யப்பட்டுள்ள ஊழியர்களை மீண்டும் பணியமர்த்தப்பட வேண்டும் என்றும், பாதுகாப்பு ஏற்பாடுகளை ஊழியர்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் பல்வேறு தீர்மானங்களை தீர்மானக்குழுவின் சார்பில் தோழர் கே. வேல்முருகன் முன்மொழிந்தார். தோழர் எஸ். குருசாமி நன்றி கூறினார்.

### புதிய நிர்வாகிகள்

**எஸ். தங்கராஜ்**/தலைவர்

**ஜி.மகாலிங்கம்**/செயலாளர்

**வி. சந்திரன்**/பொருளாளர்

### துணைத் தலைவர்கள்

ஜி. பெருமாள்சாமி, எஸ். சேர்வை, ஜி. ஆழ்வார்,

### இணைச் செயலாளர்கள்

எம். நாச்சியப்பன், எஸ். குருசாமி, ஆர். முத்தையா,

## வாரியச் செய்திகள்

- தர்மபுரி மின்வழங்கு வட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி தலைமையிடமாக கொண்டு புதிய மின்வழங்கு வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வாரிய உத்திரவு
- விழுப்புரம் மின் வழங்கு வட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு கள்ளக்குறிச்சியை தலைமை யிடமாக கொண்டு புதிய மின்வழங்கு வட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. வாரிய உத்திரவு
- தொழிற் நுட்ப உதவி யாளரிலிருந்து இளநிலை மின்பொறியாளர் 2ம் நிலையாக 96 பேர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.Memo. No. 037123/438/G122/2012-1, dated 30.04.2012.
- இளநிலை மின் பொறியாளர் 2ம் நிலையிலிருந்து இளநிலை மின்பொறியாளர் முதல்நிலையாக 319 பேர்களுக்கு பதவி உயர்வு வழங்கப் பட்டுள்ளது. Memo. No. 041013/ G13/G132/2012-1, dated 25.05.2012.
- உள்முகத் தேர்வில் 360 கள உதவியாளர்களுக்கு பண்டக காப்பாளர் 2ம்நிலையாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. Memo. No.35333/442/G34/ G341/2012 - 1, dated 08.05.2012

# பவள விழா காணும் மேட்டூர் அணை மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களும், ஊக்கத் தொகை நினைவு பரிசு வழங்க கோரி வாரியத் தலைவருக்கு எழுதிய கடித நகல்

பெறுநர் நாள்: 28/03/2012

**தலைவர்**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

பொருள் : ஈரோடு மின் உற்பத்தி வட்டம் - மேட்டூர் அணை மின் நிலையம் - மேட்டூர் அணை மின் நிலையம் 75 ஆண்டுகள் நிறைவு பவள விழா கொண்டாட்டம் - ஊக்கத் தொகை மற்றும் நினைவு பரிவு வழங்கிட வேண்டுவது - தொடர்பாக...

பார்வை : வாரிய நிலை ஆணை எண். 20 (தொழில் நுட்ப பிரிவு) நாள். 12.01.07 (ஆங்கிலம்)

ஈரோடு மின் உற்பத்தி வட்டம் மேட்டூர் அணை மின் நிலையம், 75 ஆண்டுகள் நினைவு பவள விழா கொண்டாட்டத்தையொட்டி அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வும், ஊக்கத் தொகையாக ரூ, 5,000/-மும் மற்றும் ரூ.1,000/- மதிப்புள்ள நினைவு பரிசும் வழங்கிடுவது சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

மேட்டூர் அணை மின் நிலையம் 13.06.1937-ல் துவங்கப்பட்டு, எதிர்வரும் 12.06.2012 உடன் 75 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. மின் நிலையம் துவங்கப்பட்டது முதல் மொத்தமுள்ள 4 மின் உற்பத்தி இயந்திரங்களும், நிறுவு திறனான 10 மெகாவாட்டிலிருந்து குறைக்கப்படாமல் சிறப்பான முறையில் இயங்கப்பட்டு, பிப்ரவரி 2012 மாதம் முடிவடைய 9,066.268 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்துள்ளது. அதாவது ஆண்டிற்கு சராசரியாக 120 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்து மிகச்சிறப்பான சாதனை படைத்துள்ளது.

மேலும் 2004 முதல் 2007 வரை அணை மின் நிலையத்தின் மொத்த நிறுவு திறன் 40 மெகா வாட்டிலிருந்து 50 மெகா வாட்டாக உயர்த்தப்பட்டதின் மூலம் 10 மெகா வாட்டிற்கும் அதிகமாக மட்டும் பிப்ரவரி-2012 மாதம் முடிய 71.31166 மில்லியன் அலகுகள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதுவரையிலும் அணை மின் நிலையத்திலும், உயர் அலுவலகங்களிலும், பணிபுரிந்து தொழிலாளர்கள், ஊழியர்கள், பொறியாளர்கள் அனைவரின் சிறப்பான பணியினால் மட்டுமே மேற்கண்ட மின் உற்பத்தியானது அதிக அளவில் மின் தடங்கல்கள் இல்லாமலும், இது நாள் வரையிலும் எவ்விதமாக மின் உற்பத்தி நட்டமில்லாமலும் இச்சாதனை எட்டப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்க விரும்புகிறோம்.

தமிழ்நாடு மின்சார வாரியம், குந்தா மின் உற்பத்தி வட்டத்தில் உள்ள பைக்காரா (சிங்காரா) மின் நிலையம் சிறப்பாக மின் உற்பத்தி செய்யப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெற்று பவள விழா கொண்டாடப்பட்டுள்ளதை தொடர்ந்து குந்தா உற்பத்தி வட்டத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் பார்வையில் உள்ள வாரிய ஆணை எண்.20 (தொழில் நுட்பப் பிரிவு) நாள்.12.01.07 மூலமாக ஊக்கத்தொகையாக ரூ.1,000/- மற்றும் ரூ.5,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்பட்டுள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

ஈரோடு மின் உற்பத்தி வட்டம், மேட்டூர் அணை மின் நிலையத்திலும் பவள விழா 13.06.2012 முதல் கொண்டாடும் வகையில் ஈரோடு மின் உற்பத்தி வட்டத்தில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும், பி&சி வட்டம், சிவில் பகுதி மற்றும் தலைமை பொறியாளர், நீர் மின் உற்பத்தி, சென்னை அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் ஒரு ஆண்டு உயர்வும், ஊக்கத்தொகையாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மற்றும் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும) மதிப்புள்ள நினைவு பரிசும் வழங்கிட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே தலைவர் தமிழ்நாடு மின்வாரியம் அவர்கள் இக்கடிதத்தின் மீது உடன் நடவடிக்கை எடுத்து ஈரோடு மின் உற்பத்தி வட்டம், மேட்டூர் அணை மின் நிலையத்தில் பவள விழா கொண்டாடுவதைத் தொடர்ந்து ஈரோடு மின் உற்பத்தி வட்ட அனைத்து ஊழியர்களும் பி&சி வட்டம், சிவில் பகுதி மற்றும் தலைமை பொறியாளர்/நீர் மின் உற்பத்தி மற்றும் சென்னை அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் ஓர் ஆண்டு உயர்வும், ஊக்கத் தொகையாக ரூ. 5,000/- மற்றும் நினைவு பரிசாக ரூ. 1,000/- வழங்கிட வேணுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள
(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)
பொதுச்செயலாளர்

# மஸ்தூரிலிருந்து கள உதவியாளர் பதவி உயர்வும் மத்திய அமைப்பின் நடவடிக்கையும்

எஸ். எஸ். சுப்பிரமணியன்

தமிழக மின்சார வாரியத்தில் ஊழியர்களின் பணி அளவு நிர்ணய ஒப்பந்தங்களின் படி பல்லாயிரக்கணக்கான கள உதவியாளர் பணி இடங்கள் காலியாக இருப்பதும் அந்த காலி பணியிடங்களை மின் வாரியத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள், தினக்கூலி தொழி லாளிகளுக்கு குறைந்தபட்ச கூலியை கொடுத்து முதலாளித்துவ கொள்கையான உழைப்புச் சுரண்டலை மின் வாரியத்தில் கடைபிடிப்பதும் அதை எதிர்த்து உழைப்புச்சுரண்டலுக்கு ஆளாக்கப் பட்ட ஊழியர்களை திரட்டி இயக்கங்களை நடத்தி நிரந்தரத்திற்கான உரிமைகளை பெறுவதுதான் தமிழக மின் வாரியத்தில் உழைப்பு சக்தியை பயன்படுத்தும் வரலாறு ஆகும். இவைகளை மின் வாரியத்தில் இருக்கும் தொழிற்சங்கங்களும் வாரிய அதிகாரிகளும் ஏன் அமைச்சரவை சகாக்களும் கூட உணர்ந்த ஒன்றாகும். அதிலிருந்து நிவாரணங்கள் அளித்ததும் வரலாறு ஆகும்.

மின் வாரியத்தில் கள உதவியாளர் காலி பணி இடங்களை நிரப்பாமல் வைத்துக் கொள்வது. அந்த பணி இடங்களில் உழைப்புச் சுரண்டலுக் குள்ளான ஊழியர்களை பயன்படுத்துவது அவர்கள் உரிமைக்கு குரல் கொடுக்கும் போது அவர்களுக்கு கல்வித் தகுதி, வயது அனைத்திற்கும் விதிவிலக்கு அளித்து அவர்களை கள உதவியாளர்களாக மாற்றுவது என்பது தான் வாரியத்தின் வரலாறு. இது தான் 1972 இல் இருந்து 1980 வரையில் 35000க்கும் மேற்பட்ட தினக்கூலி தொழிலாளர்கள் பணி நிரந்தரம் அடுத்து 1985 இல் இருந்து 1998 வரை காலித் கமிட்டியின் வழிகாட்டுதல் அடிப்படையில் அனைத்து விதிகளையும் தளர்த்தி அவர்கள் பணியாற்றிய பணி அனுபவத்தைக் கொண்டு 13054 ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம். இவைகளுக்கு பின்னர் அனல் மின் நிலையங்களில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு சமவேலைக்கு சம ஊதியம் என்ற தீர்ப்பினைப் பெற்று 9000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் பணிநிரந்தரம் என்று வரிசையாக மின் வாரியத்தில் பல ஆண்டுகள் தனது உழைப்பினை குறைந்த கூலிக்கு தியாகம் செய்தவர்கள் இந்த தியாக பிம்பங்களே தவிர சில பித்தர்கள் கூறுவதைப் போல் புற வழியாக வந்தவர்கள் அல்ல.

இந்த தியாக வரலாற்றின் அடிப்படையில் தோன்றியது தான் 10.8.2007 ஒப்பந்தம் ஆகும் அதனை யொட்டி தான் புதியதாக தோற்று விக்கப்பட்ட மஸ்தூர் பதவி ஆகும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் 20000க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் மத்திய அமைப்பு நீண்ட காலமாக எதிர்பார்த்த பணி நிரந்தரம் வாய்ப்பு கிடைத்த போதிலும் மின் ஊழியர் மத்திய அமைப்பு கையொப்பமிடவில்லை. இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட சங்கங்களில் ஒன்று காலித் கமிட்டி தீர்ப்பில் நிரந்தரப்படுத்திய ஒப்பந்த தொழிலாளர்களின் எண்ணிக்கைக் கேற்ப. ஐ.டி.ஐ. படித்தவர்களை வெளியில் இருந்து வேலை வாய்ப்பு துறை மூலம் எடுக்க வேண்டும் என்று குரல் கொடுப்பதாக சொல்லும் ஒரு சங்கம் 1991 இல் வந்த வழிகாட்டுதலை 2007 வரை அமல்படுத்த குரல் கொடுக்காதது மட்டுமல்ல. அந்த கோரிக்கையின் குரல் வளையை தெரிந்து கையொப்ப மிட்டவர்கள் தான் அவர்கள்.

10.8.2007 ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவதின் மூலம் தன் இருக்கையை உறுதி செய்ய முயன்ற தொழிற்சங்கம் ஒப்பந்தத்தில் ஒரு சரத்தான இரண்டாண்டுகாலம் மஸ்தூர்களாக பணியாற்றி

யவர்களுக்கு அடுத்த பதவி உயர்வு சம்மந்தமாக நிர்ணயிக்கப்படும் என்று சொன்ன சரத்தை 5 ஆண்டு காலம் வாரியம் வெறுமனே காலம் கடத்திய பின்னரும், அதை அமல்படுத்தாத சங்கம்தான் நாங்கள் மெத்தப்படித்தவர்களுக்காக நிற்கிறோம் என்று சொல்லி மெத்தப் படித்தவர் களுக்காக ஒரு சரத்து கூட இல்லாத ஒப்பந்தத்தில் யையொப்பமிட்டவர்கள்.

2007 இல் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பம் இட வாய்ப்பு ஏற்பட்டபோது கூட தனது கோரிக்கையை வலியுறுத்தி பெற வக்கில்லாத வர்கள் இன்றைக்கு 2007 ஒப்பந்த சரத்தை அமல்படுத்தும் விதமாக மஸ்தூர்களுக்கு கள உதவி யாளராக பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று காலம் கடந்து வாரியத்தை முடிவு எடுக்கச் செய்த பின்னரும் அந்த முடிவு தற்காலிகமாக வெளிவருவதற்கு குந்தகம் விளைவிக்க கூடிய வகையில் வாதத்தை வைப்பவர்கள் தான் மெத்தப்படித்தவர்கள் (புத்திசாலித்தனம் போலும்).

மின்வாரியத்தில் செயல்படும் மத்திய அமைப்பு மின் வாரியத்தில் காலியாக உள்ள 52,000 பணி இடங்களையும் நிரப்ப வேண்டும். அதிலும் குறிப்பாக ஆரம்ப கட்ட பதவிகளான கள உதவியாளர் பதவிகளை ஒப்பந்த தொரிலாளிகள், ஐ.டி.ஐ. படித்தவர்களை கொண்டு நிரப்பிட வேண்டுமென்று வலிமையாக வாதிட்டு வரும் அமைப்பாகும்.



ஆனால் தனது இருக்கையை தக்கவைத்துக் கொள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட சங்கம் 36000 கள உதவியாளர் பணி காலியிடங்களை நிரப்பிட வேண்டும் என்று ஓங்கி குரல் கொடுப்பதாக சொல்லி கொண்டே 36000 காலி பணி இடத்தை உடனடியாக நிரப்பிட இயலா விட்டாலும் வருடத்திற்கு 7000 பேர்கள் விதம் எடுத்து வாரிய பணியில் அமர்த்திட வேண்டும் என்பது காலியிடங்கள் முழுவதையும் நிரப்பிடு என்று சொல்வதற்கு பதிலாக அரசுக்கும், வாரியத்திற்கும் விலைபோகும் போக்கையே கடைபிடிக்கும் அமைப்பு என தெற்றென தெரிகிறது.

மின் ஊழியர் மத்திய அமைப்பை பொருத்த வரையில் 10.8.2007 ஒப்பந்தத்தில் பங்குதாரராக இல்லாவிட்டாலும் ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட சரத்தான 2 ஆண்டுகாலம் பணி முடித்த மஸ்தூர்களுக்கு கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிப்பதற்கு எதிராக எந்த சாகச வலைகள் வந்தாலும் அவைகளை தகர்த்தெரிந்து தனது நோக்கத்தை அடைந்தே தீருவதற்குண்டான நடவடிக்கையை தொடரும் பதவிகளை பெற்றுத்தரும். அது மட்டுமல்லாமல் அந்த ஒப்பந்தத்தின் மற்றுமொறு சரத்தான கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையும், ஹெல்பர் கம் மீட்டர் ரீடர் 5 ஆண்டுகாலம் பதவி உயர்வுக்கு காத்திருக்க வேண்டும் என்ற பாதகமான சரத்தையும் ரத்து செய்து பதவி உயர்வு பெறுவதற்குண்டான நடவடிக்கையை தொடரும். மாற்றங்களை பெற்றுத்தரும்.

## உலகத்திலேயே ஒரே இடத்தில் நிலக்கரியை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் அதானி மின் நிலையம்

முந்திர மின்நிலையத்தின் 5வது அலகாக அதானி மின் நிலையம் மின் உற்பத்தியை துவங்கியுள்ளது. இதனுடைய உற்பத்தி திறன் 4620 மெகாவாட், உலகிலேயே நிலக்கரியை பயன்படுத்தி அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனமாகும் சீனா, போலந்து, தைவான் ஆகிய நாடுகளில் ஒரே இடத்தில் 5000 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட மின் நிலையங்கள் ஏற்கனவே இருந்த பொழுதும் அவை அனைத்தும் அரசின் கீழ் செயல்படும் மின் நிலையங்களாகும். 2009-2010 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிலேயே அதிக உற்பத்தி திறனை கொண்ட தனியார் மின் நிலையம் என்பது அதானி மின் நிலையம் ஆகும். இதனுடைய உற்பத்தி திறன் குஜராத், மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், ஜார்கண்ட் போன்ற மாநிலங்களில் செயல்படும் மெகா பவர் மின் திட்டம் 15 % கூடுதலாக மின் உற்பத்தி செய்யும் நிலையமாகும். இந்தியாவிலேயே அரசின் செயல்படும் தேசிய, அனல் மின் கழகத்தின் உற்பத்தி திறனான 4000 மெகாவாட்டை விட அதிக மின் உற்பத்தியை செய்யும் தனியார் நிறுவனம் அதானி நிறுவனமாகும்.

### கிளைச்செயலாளர் கவனத்திற்கு

மத்திய அமைப்பிற்கு சந்தா அனுப்பும் போது மின்கதிர் விலாசம் என்று குறிப்பிட்ட இடத்தில் சந்தாதாரர்களின் பெயர், வீட்டு விலாசம் தெளிவாக PinCode குறிப்பிட்டு அனுப்பவும்.

-மத்திய அமைப்பு




# தமிழ்நாட்டில் தீண்டாமை

து. கோவிந்தராஜு

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 10.5.2012 அன்று தமிழக அமைச்சர்கள் நிதியமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் தலைமையில் "தமிழ்நாட்டில் தீண்டாமையே கிடையாது, தீண்டாமை கடை பிடிக்கப்படும் ஒரு இடத்தையாவது உங்களால் காட்டமுடியுமா" -என்று ஒரு சேர எதிர்க்கட்சியினரை பார்த்து சவால்விட்டனர். எதிர் தரப்பினரின் இதற்கான பதில் நமது காதில் விழவில்லை, ஊடகங் களிலும், ஒலி/ஒளி பரப்ப செய்யப்படவில்லை.

சுமார் ஓராண்டிற்கு முன்னால் தமிழக தனியார் தொலைக்காட்சியில் இளவயதினருக்கான பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட ஒரு மாணவன், சமூகத்தில் நிலவும் தீண்டாமையின் கொடூரத்தை பற்றி விளக்கி பேசினார். அமர்வில் நடுவராக நடிகர் சிவக்குமாரும், அவ்வை நடராஜனும் அமர்ந்திருந்தனர். மாணவனின் பேச்சு முடிந்தபின் நடுவர் அவ்வை நடராஜன் கருத்துக் கூறினார். "நன்றாக பேசினீர்கள். ஆனாலும் நமது நாட்டில் 1955 லேயே தீண்டாமை ஒழிக்கப் பட்டுவிட்டது" - என்று கூறினார். இதை கேட்ட நமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைவிடவும், பேசிய மாணவன் பேரதிர்ச்சிக்கு ஆளாகி அமர்ந்து விட்டான்.

இவ்வாறு அமைச்சர் பெருமக்களும், அவ்வை நடராஜன்களும் 1955லேயே நாட்டில் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதாக கூறு கிறார்களே இது எந்த அளவிற்கு உண்மை?. நடைமுறையில் நாட்டில் தீண்டாமை கடைபிடிக்கப் படுகிறதா? இல்லையா?.

தமிழக அரசு தமிழ்நாட்டில் 364 ஜாதிகள் இருப்பதாக அதிகார பூர்வமாக அறிவிப்பு செய்திருக்கிறது. இதைவிடவும் கூடுதலாக 427 ஜாதிகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த ஜாதிகளுக்குள் வன்மம், பகை, விரோதம், அசூயை, புறக்கணிப்பு, தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறதா ? இல்லையா?.

இந்த கேள்வியை கருத்துக் கணிப்பு சுற்றுக்கு விட்டால் அதிமுக அரசின் ஆதரவு ஊடகங்கள் கூட சொல்லும்செய்தி "தீண்டாமை கடைபிடிக்கப் படுகிறது". என்பதாக தான் இருக்க முடியும்.

**உண்மையை நேர்மையோடு ஒத்துக் கொண்டு நிலைமையை சரிசெய்ய முயற்சிப்பது தான் நல்ல அரசின் அடையாளம் என்பதை அமைச்சர்களுக்கும், அவ்வை நடராஜன்களுக்கும் யார் சொல்வது?.**

அரசியல் அமைப்புச் சட்டம், நகல் அறிக்கை தயாரிப்பு பணி நடந்து கொண்டிருக்கும் 1949ல் டாக்டர் அம்பேத்கர் தனது அனுபவங்களின் அடிப்படையில் தனது மனதில் ஏற்பட்ட அச்சத்தை வெளிப்படுத்தினார். 1950 ஜனவரி 26 அனைத்து இந்தியனும் அரசியலில் ஒரே மதிப்புடையவராக மாறப்போகிறார்கள். ஏழை, பணக்காரன், உயர்ந் தவன், தாழ்ந்தவன் ஆகிய அனைவருக்கும் ஒரே வாக்கு, அந்த ஒரே வாக்கிற்கு ஒரே மதிப்பு. ஆனால் சமூதாயத்தில்? .. அரசியலில் சம நிலையை அடைந்த நாம் சமுதாயத்தில் சமநிலையை அடையாமல் உள்ளதை வெளிப்படையாக தெரி வித்தார். அதனடிப்படையில் தான் 1955 -ம் வருடம் மே மாதம் 8ந் தேதி 22வது சட்டமாக தீண்டாமை ஒழிப்பு சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உருவாக்கப்பட்டது. இந்த சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பும், இந்தியாவில் தீண்டாமைக்கு எதிராக 21 சட்டங்கள் இருந்திருக்கின்றன. இருந்தாலும், தீண்டாமைக்கு எதிராக பெரிய அளவில் பேசப்படுகிற சம்பந்தப்பட்ட மக்களுக்கு ஓரளவு பாதுகாப்பு தருகிற சட்டமாக இந்த சட்டம் (Protection of Civil Rights Act 1955) மட்டுமே இன்று வரை சில திருத்தங்களுடன் அமலாக்கத்தில் இருந்து வருகிறது.

இந்த சட்டத்தின் 3முதல் 7 பிரிவுகளில் எந்தெந்த வகையான செயல்கள் தீண்டாமையின் கீழ் வருகிறது என்பதும் அனைவருக்குமான அடிப்படை

உரிமைகள் என்னென்ன என்பது பற்றியும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் சுந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் ஆனபின்பும் இன்னும் இந்த சட்டம் ஏட்டளவில் தான் உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்கள் மீது இந்தியாவில் - தமிழகத்தில் மிகப்பெரும் அளவில் தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. மிருகங்களைவிடவும் இந்த மக்கள் பல இடங்களில் கேவலமாக நடத்தப் படுகின்றனர். அதிகார வர்க்கத்தின் மீது சமயங்களில் நீதிமன்றங்களின் மீது கூட இப்பகுதி நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

கான்சியாம் ஷா என்பவர் எழுதிய "கிராமப் புற இந்தியாவில் தீண்டாமை" - எனும் ஆய்வு நூலில் தாழ்த்தப்பட்ட மக்கள் பொது இடங்களில் நடத்தப்படும் விதம் குறித்து ஆய்வு செய்து சில புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது. 48.4 சதவீத மக்கள் பொது இடங்களில் தண்ணீர் எடுக்க மறுக்கப்படுகின்றன. 35.8 சதவீத தாழ்த்தப்பட்ட மக்கள் சலூன், ஹோட்டல், டீக்கடை, ரேஷன் கடை, தபால் அலுவலகம், பஞ்சாயத்து அலுவலகம் ஆகியவற்றில் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. 47 சதவீத கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் திருமண, இறுதி ஊர்வலங்களுக்கான அனுமதி மறுக்கப் படுகிறது. 64 சதவீத கிராமங்களில் ஆலயநுழைவு அனுமதி மறுக்கப்படுகிறது .... என்பன போன்ற புள்ளி விவரங்கள் இந்திய கிராமங்களில் தாழ்த்தப் பட்ட மக்களுடைய வாழ்நிலையை தெள்ளத் தெளிவாக சொல்லி செல்கிறது.

மேளம்அடிப்பது, சவஅடக்க குழி வெட்டுவது, துக்கம் சொல்ல செல்வது, செருப்பு தைப்பது, துப்புறவு செய்வது, இறந்த மிருகங்களை அப்புறப்படுத்துவது என்பன போன்ற வேலைகளை செய்யச் சொல்லி பரவலாக இன்னும் தமிழக கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் நிர்பந்திக்கப் படுகிறார்கள்.

அரசியல் அமைப்புச்சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை பெறுவதற்கு முயற்சிக்கும்பொழுது இப்பகுதி மக்கள் ஆளும் வர்க்கத்தினராலும், அதிகார வர்க்கத்தினராலும் கடுமையாக தாக்கப்படுகிறார்கள். இப்பகுதி பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட தாழ்த்தப்பட்ட உள்ளாட்சிமன்றத் தலைவர் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் கருவடத்தெரு கிராமத்தில் தேசிய கொடியேற்றவும் - பஞ்சாயத்து அலுவலக தலைவர்க் குரிய இருக்கையில் அமரவும் மறுக்கப்பட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தலையிட்டு, இயக்கம் நடத்தி, காவல்துறை உதவியோடு தான் சமத்தவத்தை தற்காலிகமாகவேணும் பெற முடிந்துள்ளதை நினைவுபடுத்துகிறோம். ஜாதி மறுத்து கலப்பு திருமணம் செய்து கொண்டு பல பெண்களும், ஆண்களும் ஜாதிய வெறியர்களால் இன்றும் படுகொலை செய்யப்படுவது போன்ற நிகழ்ச்சியின் பட்டியல் நீளமானது.

தங்கள் மீதான தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கி உள்ள பாதுகாப்புக் கூட காவல் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் பெருமளவில் இந்த மக்களுக்கு உதவுவதில்லை, பாதுகாப்பு அளிக்கவில்லை என்பது தான் இன்றைக்கும் உள்ள எதார்த்தம். இது சமானிய மக்களைவிட சகல வாய்ப்புகளையும் பெற்றிருக்கிற அரசுக்கும், அதன் அமைச்சர்களுக்கும் நன்றாகவே தெரியும். **தமிழ்நாட்டில் உள்ள 63,256 கிராமங்களிலும் இந்த நிலை நீடிக்கிறது**. இதயசுத்தியோடு எல்லோரும் ஓர்இனம், எல்லோரும் ஓர்குலம் என்கிற இலட்சினைக்கு சொந்தமான அரசும், அமைச்சர்களும் இருக்கிற அவலத்தை போக்குவதற்கும், எல்லோரும் சமமாக வாழ்வதற்குமான ஏற்பாட்டினை தேவைப்பட்டால் சட்டத்தின் துணையோடு கூட செய்து முடிக்க வேண்டும் - என்பது தான் இப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

முடிப்பதற்கு முன்னால் நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தின் சொந்த மாவட்டமான மதுரை மாவட்டத்தில் நிலவும் தீண்டாமை கொடுமைப் பற்றிய ஆய்வு செய்தியை அவரின் மேலான பார்வைக்கு சமர்பிக்கிறோம். 25.05.2012 நாளிட்ட தினமலரில் எவிடன்ஸ் நிர்வாக இயக்குநர் கதிர் அவர்களின் குழுவினர் மதுரை மாவட்டத்தில் தீண்டாமை குறித்து ஆய்வு செய்த அறிக்கை வெளி யாகி உள்ளது. ஆய்வு நடத்திய 149 கிராமங்களில் 463 டீக் கடைகளில் இரட்டை டம்ளர் முறை இன்று வரை இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதில் 131 கிராமங்களில் தனித் தனி டம்ளர்கள் 9 கிராமங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் தேநீர் அருந்திய டம்ளரை கழுவி வைக்கவேண்டும். 67 கிராமங் களில் தாழ்த்தப்பட்டவர்கள் அமர்வதற்கு தனித்தனி யான இடங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது போன்ற விவரங்கள் வெளியாகி உள்ளது.

2011ஆம் ஆண்டில் சுப்ரீம் கோர்ட் அனைத்து கிராமங்களிலும், "சமத்துவ தேநீர் விருந்து திட்டம்" என்னும் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று உத்திரவிட்டுள்ளது. மேற்கண்ட கிராமங்களிலாவது நீதிமன்ற உத்திரவை உடனடி யாக நடைமுறைப்படுத்த தமிழகத்தை ஆளுகின்ற அதிமுக அரசாங்கம் முன்வர வேண்டுமென்று விரும்புகிறோம்.

# மஸ்தூர்களிலிருந்து கள உதவியாளர்களாக பதவிஉயர்வு வழங்குவதற்குண்டான வாரிய உத்திரவு

**:: TAMIL NADU GENERATION & DISTRIBUTION CORPORATION ::**

**(ABSTRACT)**

**Mazdoor promotion to the post of Helper - Relaxation of qualification - Approval accorded - Orders - Issued.**

**(Administrative Branch)**

**(Per.) FB TANGEDCO** — **Dated : 23.05.2012**

**Proceedings No. : 9** — **Nandhana Aandu, Vaigasi : 10**

**Thiruvalluvar Aandu : 2043**

**READ :**

1. Per B.P. (FB) No.37 dated 29.10.05
2. Per B.P. (FB) No.42 dated 06.09.07
3. Per B.P. (FB) No.44 dated 06.09.07
4. Per B.P. (FB) No.45 dated 06.09.07
5. Item No. 25 - Extract of the Minutes of the 22nd Meeting of the TANGEDCO held on 06.03.12

**PROCEEDINGS :**

(1) Based on the 12(3) settlement dt.10.08.07 signed before the Commissioner of Labour, the TNEB issued orders for revival of the post of Mazdoor and for absorption of contract labourers who have worked continuously in Distribution Circles, General Construction Circles and Wind Energy Development Circles as Mazdoor, Helper cum Meter Reader and Assessor Grade - II in a phased manner vide B.Ps. read above. As per these orders, the contract labourers whose qualification is below 10th standard and 'nil' qualification have been appointed to the post of Mazdoor vide B.P. (3) read above.

(2) Further as per the said settlement, the Board has also issued orders prescribing 2 years of service to the Mazdoors for their next promotion vide B.P. (4) read above.

(3) The above said settlement was challenged by the unions in the Hon'ble High Court/ Madras and then in the Hon'ble Supreme Court. Finally the Divisional Bench of the Hon'ble High Court/ Madras have passed orders in W.P. No.1302 dt.24.10.08 among other things upholding the settlement into.

(4) However, various unions in the TANGEDCO have represented to consider the promotion of the Mazdoor appointed as per 12(3) settlement as provided in the settlement. The representation of the Unions have been carefully examined by the TANGEDCO.

The qualification of NTC/ NAC for the post of Helper was prescribed vide B.P. (FB)

No.38 dt.23.05.86 and the amendment to Service Regulation 94 (a) of Tamil Nadu Electricity Board Service Regulation was also issued. Subsequently, the issue of the revised qualification of NTC/NAC for the post of Helpers was taken up by the Unions in the High Court and then in the Supreme Court. The Supreme Court appointed Justice Khalid Commission to examine the matter and give its report. The Justice Khalid Commission gave its report dt.11.12.91 in the SLP No. 1820/90 and the same was issued by the Supreme Court. Thus the report of Justice Khalid Commission became the order of Supreme Court.

5) Prior to the 12 (3) settlement the initial level category in RWE is Helper and the earlier absorption of contract labourers as per the Justice Khalid Commission's report and as per the orders of the Board was therefore made to the post of Helper. However, due to acute financial stringency and due to administrative reasons the TNEB passed orders for revival of the post of Mazdoor in a lesser scale of pay and to consider them for promotion after 2 years service. Therefore the Mazdoor appointed as per the 12 (3) settlement are eligible to be considered for promotion to the post of Helper.

6) In its report Justice Khalid Commission has observed that the workers who had worked for 2 years and more have experience to do the work expected of the skilled helpers and that the experience will compensate for the qualification prescribed. Accordingly, as per Justice Khalid Commission's report the Board has regularized the service of 13,054 contract labourers in a phased manner from 1991 to 31.03.98 by relaxing the rules relating to educational qualification and age.

7) In the 22nd Board meeting of TANGEDCO Ltd., held on 06.03.12, the Board has considered the representation of the unions to consider the promotion to the post of Mazdoor sympathetically and approved the proposal for the relaxation of rules relating to qualification of NTC/ NAC in favour of Mazdoors for promotion to the post of Helper in a phased manner and accordingly 6,593 Mazdoors as Helper (Field Assistant) in the first phase who are working in Distribution Circles, General Construction Circles and Wind Energy Development Circles

8) Accordingly, the TANGEDCO hereby direct that the 6,593 Mazdoors appointed during the year 2005 to 2007 as mentioned in the Annexure shall be promoted as Helper (Field Assistant) in the first phase in the time scale of pay of Rs.5,400 - 20,200 + 1,900 G.P **if they are or otherwise suitable.**

9) The TANGEDCO also have decided that consequent on promotion of Mazdoors, the 6,593 post of Mazdoors shall be abolished.

10) The Superintending Engineers are informed that the no. of Mazdoors appointed during the year 2005 and 2007 are furnished in the Annexure enclosed.

(11) The receipt of this B.P. should be acknowledged.

(BY ORDER OF THE BOARD)

Sd./-xxx 23.05.12.
(S. SYED LIYAKATH)
CHIEF ENGINEER / PERSONNEL

## ANNEXURE

## STATEMENT SHOWING THE TOTAL NUMBER OF MAZDOORS APPOINTED DURING THE YEARS 2005 & 2007

| Sl. No. | NAME OF THE REGION/ CIRCLE | Mazdoors appointed during 2005 | Mazdoors appointed during 2007 |
|---|---|---|---|
| **I.** | **CHENNAI REGION NORTH** | | |
| 01. | Chennai EDC/North | **141** | **70** |
| 02. | Chennai EDC/Central | **285** | **81** |
| **II.** | **CHENNAI REGION/SOUTH** | | |
| 03. | Chennai EDC/South | **350** | **100** |
| 04. | Chennai EDC/West | **166** | **69** |
| 05. | Chengal EDC | **44** | **222** |
| **III.** | **VELLORE REGION** | | |
| 06. | Kancheepuram EDC | **25** | **32** |
| 07. | Vellore EDC | **35** | **247** |
| 08. | Tirupathur EDC | **28** | **62** |
| 09. | Dharmapuri EDC | **48** | **278** |
| **IV.** | **VILLUPURAM REGION** | | |
| 10. | Villupuram EDC | **53** | **142** |
| 11. | Cuddalore EDC | **46** | **59** |
| 12. | Tiruvannamalai EDC | **68** | **167** |
| **V.** | **TRICHY REGION** | | |
| 13. | Trichy EDC/Metro | **106** | **156** |
| 14. | Perambalur EDC | **19** | **117** |
| 15. | Karur EDC | **33** | **57** |
| 16. | Pudukottai EDC | **22** | **74** |
| 17. | Thanjavur EDC | **25** | **83** |
| 18. | Nagapattinam EDC | **30** | **228** |
| **VI.** | **COIMBATORE REGION** | | |
| 19. | Coimbatore EDC/Metro | **48** | **41** |
| 20. | Coimbatore EDC/South | **54** | **80** |
| 21. | Coimbatore EDC/North | **45** | **65** |
| 22. | Nilgiris EDC | **26** | **23** |
| 23. | Udumalpet EDC | **25** | **120** |
| **VII** | **MADURAI REGION** | | |
| 24. | Dindigul EDC | **42** | **144** |
| 25. | Madurai EDC/Metro | **24** | |

**ANNEXURE**

**STATEMENT SHOWING THE TOTAL NUMBER OF MAZDOORS APPOINTED DURING THE YEARS 2005 & 2007**

| Sl. No. | NAME OF THE REGION/ CIRCLE | Mazdoors appointed during 2005 | Mazdoors appointed during 2007 |
|---|---|---|---|
| 26. | Madurai EDC | **51** | **171** |
| 27. | Theni EDC | **14** | **54** |
| 28. | Ramnad EDC | **17** | **70** |
| 29. | Sivagangai EDC | **29** | **20** |
| **VIII** | **TIRUNELVELI REGION** | | |
| 30. | Virudhunagar EDC | **18** | **89** |
| 31. | Tirunelveli EDC | **75** | **215** |
| 32. | Tuticorin EDC | **14** | **112** |
| 33. | Kanyakumari EDC | **14** | **103** |
| **IX.** | **ERODE REGION** | | |
| 34. | Salem EDC | **88** | **331** |
| 35. | Mettur EDC | **13** | **96** |
| 36. | Namakkal EDC | **14** | **83** |
| 37. | Erode EDC | **30** | **95** |
| 38. | Gobi EDC | **26** | **58** |
| 39. | G.C.C./Chennai | - | **39** |
| 40. | G.C.C./Trichy | - | **46** |
| 41. | G.C.C./Madurai | - | **44** |
| 42. | G.C.C./Coimbatore | - | **9** |
| 43. | G.C.C./Salem | - | **9** |
| 44. | Wind Engergy/T'veli | - | **10** |
| 45. | Wind Engergy/U'pAt | - | **6** |
| 46. | P&C/Coimbatore | - | **1** |
| 47. | C.M.C./Madurai | - | **1** |
| 48. | H.P./Urachikottai | - | **23** |
| | **Total** | **2,191** | **4,402** |
| | **Grand Total** | **6,593** | |

Sd./-xxx 23.05.12.
(G. LALITHA)
PERSONNEL OFFICER/COURT CASES
for CHIEF ENGINEER/ PERSONNEL



# கனவு மெய்ப்பட வேண்டும்

கோ. மோகன்ராஜ்

"ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைத்தான்"
"அவன் தலையில் என்ன எழுதி இருக்கிறதோ அதுதான் நடக்கும்"
"எதுவும் நம் கையில் இல்லை, எல்லாம் அவன் கையில்"
"உயர உயர பறந்தாலும்- ஊர் குருவி பருந்தாகாது"
"விதியை யாராலும் வெல்ல முடியாது"

இதனைதான் கவிஞர் வைரமுத்து திருத்தி எழுத வேண்டிய தீர்ப்புகள் என்று எழுதினான் இதனை தகர்க்க தான் மனிதன் மனிதனுக்குல் மலர வேண்டும்.... வர்க்கமாய் மாற வேண்டும் என்றான் மார்க்ஸ்.

வர்ணபாகுபாட்டை சரி செய்ய 1902 ஆம் ஆண்டு கோல்ஹொப்பூர் அரசர் பிறபித்த ஆணையில் அரசாங்க வேலைகளில் 50% பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தர வேண்டும் என அரசாரணை பிறப்பித்தார்.

பின்பு தலித்துக்களுக்கு 18%, மண்டல் கமிசன் பரிந்துரை, தற்போது நமது தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் கடும் போராட்டம் மூலம் அருந்ததியர்களுக்கு 3 சதம் உள் ஒதுக்கீடு என பல பயன்கள்.

அந்த காலத்திலேயே மிகப்பெரிய கிளர்ச்சியாளராக ஜோதிபாபுலே, டாக்டர் அம்பேத்கர், சர்.பி.தியாகராஜர், பெருந்தலைவர் காமராஜர், முத்துராமலிங்க தேவர், தந்தை பெரியார் மற்றும் பி.இராமமூர்த்தி இந்த வர்ண பாகுப்பாட்டை உடைத்து கல்வியில் உயர்வோம் என்றார்கள்.

அம்பேத்கர் தனது முதல் கோசத்தையே கற்பி என்று தான் துவங்கினார். நமது நாட்டின் ஒவ்வொரு விவசாய கூலியும் சாதாரண கூலி தொழிலாளியும். நடுத்தர அடித்தட்டு மக்களுக்கும் உள்ளே ஒரே கனவு காலம் முழுவதும் நான் கஷ்டப்பட்டுவிட்டேன் என் பிள்ளைகளையாவது படித்து கௌரவமான மனிதனாக வர வைக்க வேண்டும் அந்த பாமரர்களின் கனவு நியாயம் தானே?

ஆனால் நமது நாட்டில் கல்வி வாங்கமுடியாத வியாபார தொழிலாக மாறிவிட்டது. மிக உயர்ந்த அந்தஸ்தில் பதவியில் இருப்பவர்கள் கூட தனது பிள்ளைகளை எல்.கே.ஜி.யில் சேர்ப்பதற்கு பாடச் சாலை பிளாட்பாரத்தில் படுத்திருந்து இரவு முடிந்த பின்பு பள்ளி சேர்க்க வேண்டிய படிவம் வாங்க வேண்டி உள்ளது.

குழந்தைகளை படிக்க வைப்பதற்கு அப்பா - அம்மா பட்ட படிப்பு படித்திருக்க வேண்டும். கார் வைத்திருக்க வேண்டும். உலகதரம் வாய்ந்த பள்ளி கூடங்களும் உண்டு இதற்கு 20 ஆயிரம் முதல் 1/2 லட்சம் வரை கட்டணம்.

இதன் பின்பு மேல் படிப்புக்கு மாணவர்களை மருத்துவர்களாக சேர்க்க 40 லட்சம் முதல் 60 லட்சம் வரையும் பொறிஞர் படிப்பதற்கு 15 லட்சம் முதல் 20 லட்சம் வரையும் ஆகும். இப்படி படித்து முடித்த மாணவர்கள் வேலை வாங்குவதற்கு பல லட்சம் கொடுக்க வேண்டும்.

பின்பு அந்த மாணவனுக்கு எங்கு தேசபற்று சமூக சேவை செய்ய தோன்றும் முதல் போட்டதை எடுக்க வேண்டும். எனவே தான் செத்த பிணத்தை கூட இரண்டு நாட்கள் மருத்துவமனையில் வைத்து பணம் சம்பாதிக்கின்றனர்.

இதற்கெல்லாம் யார் காரணம்? இந்த கல்லூரிகளை நடத்துபவர்கள் யார்? கதர் வேட்டி கட்டிய தேச நலத்துக்கு குரல் கொடுக்கும் அரசியல்வாதிகளே, தமிழனுக்கு குரல் கொடுக்கும் திராவிட தலைகுனிவுகளே...

எனவேதான் இடதுசாரி அரசியல்கட்சிகள் சொல்கிறது சமச்சீர் கல்வி முறையே அமுல்படுத்து. அதனை அமுல்படுத்த உச்ச நீதிமன்றம் வரை சென்று அமுல்படுத்தப்பட்டது.

இந்த கல்விக்கான கடும் போட்டியில் பாறைகளையும் கடும் தடுப்பு சுவர்களையும் உடைத்துக்கொண்டு வரும் உழைப்பாளி மக்களின் பிள்ளைகளின் நிலைமைதான் பெரும் போராட்டமாகும்.

அடிப்படை கல்வியில் உயர்ந்த மதிப்பெண்கள் எடுத்து கடந்த நான்கு மாதங்களில் இருபத்திரண்டு மாணவ மலர்கள் தற்கொலை செய்து கொண்டு உள்ளனர். இதற்கு இந்த அரசும். கல்வி துறையும் தான் முழு பொறுப்பாகும்.

அரசே அறிவித்திருக்கிறது. தலித் பழங்குடி இன மக்களுக்குகான கல்வி நிதி பணத்தினை அதற்கு உரிய இடத்தில் அவர்கள் முழுமையாக இடம்பெறாதால் இப்பணத்தினை பொது திட்டத்திற்கு பயன்படுத்துகின்றோம் என்கிறது இதனை முழுமையாக அமல் படுத்த நமது தீண்டாமை ஒழிப்பு முன்னணி பெறும் போராட்டத்திற்கு திட்டமிட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக அதிரவைக்கும் செய்தி ஏழைகள் கடும் பாடுபட்டு +2 தேர்வில் உயர்வு மதிப்பெண்கள் பெற்று அண்ணா பல்கலைகழகம் மூலம் படிக்கலாம் என்றால் அங்கு 68 சதம் மாணவர்கள் சென்ற ஆண்டு தோல்வி அடைந்து உள்ளனர் என்ற செய்தி வேதனையாகும்.

ஒரு ஏழை விவசாயின் மகள் தைரியலட்சுமி +2 தேர்வில் 92 சதவீதம் மதிப்பெண்கள் எடுத்து அண்ணா பல்கலைகழகத்தில் ஆயிரம் கனவுகளோடு சேர்ந்து ஓர் ஆண்டு கூட நிறைவடையம் முன்பு தற்கொலை செய்து கொண்டு இருக்கிறார்.

அதே கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவன் சில நாட்களுக்கு முன் தற்கொலை செய்து கொண்டு உள்ளான். இவன் குழந்தை தொழிலாளியாக இருந்து மீட்கப்பட்டு +2 தேர்வில் 97% மார்க் எடுத்து மாநிலத்திலேயே 13வது இடம் வந்துள்ளான்.

பல்கலைக்கழகம் இவர்கள் தற்கொலைக்கு கூறும் காரணம் தான் வேடிக்கை இவர்கள் தமிழ்வழி கல்வி பயின்று பொறியாளர் படிப்பில் ஆங்கில வழிமுறை பயில முடியாததுதான் காரணம் என்கிறது.

அய்யகோ, ஐந்து ஆயிரத்து ஐநூறு கோடி செலவில் தமிழ்செம்மொழி மாநாடு நடத்திய மரத்தமிழன் மண்ணில்தான் இந்த மானங்கெட்ட தற்கொலை நிகழ்வுகள்.

தமிழன் என்று சொல்லடா... தற்கொலையில் செல்லடா என்கிறது அரசு.

இதில் 12 பள்ளி மாணவர்கள் தற்கொலை செய்து உள்ளனர். இதற்கு பெற்றோர்களும் பெரும் காரணமாவர் நம் பிள்ளைகளுக்கு நமது கலையை, பண்பாட்டை, விளையாட்டை, மண்ணின் வாசனையை, குடும்ப உறவு முறைகளை, வரலாற்றை, வாழ்வியலை சொல்லி கொடுக்காமல் மதிப்பெண்கள் பற்றியே ஓயாமல் விரட்டுவது படி, படி, படி என எப்போதும் பதறவைப்பது, எதிர்த்து பேசாதே, சொன்னதை செய் உன் உயர்வுக்குதான் சொல்கின்றோம் என்று சொல்வது.

இப்படியாய் அவர்கள் படித்து உயர்ந்த பின்பு உயர் பதவிக்கு வந்த பின்பு உங்கள் பிள்ளைகள் உங்களை முதியோர் இல்லத்தில் தான் முதலில் சேர்ப்பார்கள் காரணம் அவர்களுக்கு நீங்கள் உறவுகள் சொல்லி கொடுக்காததுதான்.

சமூகமே... பெற்றோர்களே உங்கள் நிர்பந்தங்களை பிள்ளைகள் மீது திணிக்காதீர், மண்ணில் மனம் வீச வேண்டி அவர்களின் கனவுகளை களைக்காதீர். மண் பயன் உற வேண்டிய பிஞ்சு மலர்களை.... நாட்டின் எதிர் காலங்களை தற்கொலையில் தள்ளாதீர்.

27.4.12 உயர்நீதிமன்றம் பிள்ளைகள் தற்கொலை வழக்கில் 74% மாணவர்கள் மிகவும் மன அழுத்ததில் உள்ளனர். இவைகளை களைய மனோத்தத்துவ நிபுணர்களை கல்லூரிகளுக்கு அனுப்பி சரி செய்ய வேண்டும் என்கிறது.

சமிபத்தில் வெளியான "பூ" என்கிற திரைப்படம் இயக்குநர் சசி இயக்கிய, தமிழ் செல்வனின் கதை படத்தை மீண்டும் பாருங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு.... பாதி பகல் கனவுகள்,

பாரதி வரியில்....

கனவு மெய்பட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைபட வேண்டும் -

எனவே
கல்வியை ... கலையாக்குவோம்....
மாணவர்களை... மலையாக்குவோம்....

## ஒரு நாள் மின் விநியோக விடுமுறையால் கோவையில் ஏற்படும் இழப்பு 900 கோடியாம்

கோவையும், கோவை மாநகரத்தையும் சுற்றியுள்ள இடங்களில் 40,000க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழகத்தில் மின் பற்றாக் குறையால் ஒரு நாள் மின் விநியோக விடுப்பு என்பதை அமல்படுத்துவதனால் ரூ. 900 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக தொழிற்சாலை கயைச் சார்ந்தவர்கள் கவலையோடு அறிவிக் கின்றனர். 40,000 க்கும் மேற்பட்ட தொழிற் சாலைகளும், நீர் இறைக்கும் பம்பு, அதையொட்டிய இயந்திர தயாரிப்பாளர்கள் நூற்பாலைகள் தங்களது ஆலைச்சக்கரங்கள் சுழல்வதை நிறுத்தி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகத்திற்கு ஒத்துழைப்பை நல்கி மின் பற்றாக்குறையை எதிர் கொண்டு வருவதாக கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில் உற்பத்தியாளர்கள் கழகத்தின் தலைவர் திரு.எம். கந்தசாமி கூறுகிறார். மேலும் அவர் கூறும் போது ஒரு நாள் மின் விநியோகம் பெறுவதற்கு விடுப்பு அளித்து வாரத்தின் மற்ற நாட்களில் மின்சாரத்தை தடையின்றி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்.

# மின்வாரியத்தில் மீட்டர்கள் பற்றாக்குறையால் மின்நுகர்வோர்கள் வாங்கி கொடுக்கும் மீட்டர்களை ஏற்றுக் கொள்வது சம்மந்தமாக வாரியம் எழுதிய கடிதம்

**MOST IMMEDIATE**

## TANGEDCO Ltd.

From
Er. R. Srinivasan, B.E.,
Chief Engineer/
Material Management,
4th Floor / NPKRR Maaligai,
800 Anna Salai, Chennai.2.

To
All Chief Engineers/Distribution/Region

**Lr. No.: SE / MM-II / EEM / A1 / F. Meters / D.1191 / 12 Dt. 22.03.12**

Dear Sirs.

Sub. : MM-II - Acceptance of Consumers Meters - Regarding
Ref. : TNERC'S Order No.1 of 2012 dated 15.03.2012

TNERC vide their order No.1 of 2012 dated 15.03.2012, have directed the following:

1) TANGEDCO shall provide a list of makes fna models of the meters to enable the consumers to buy any one of those meters for this purpose. The TANGEDCO shall notify atleast 4 makes of meters duly keeping in view the make and type of meters being purchased by them.

2) The TANGEDCO shall be put in a place a system of quality assurance and testing of meters. Necessary approval for the same shall also be obtained from the Commission.

3) If TANGEDCO is satisfied with the Test Certificate issued by the manufacturer, which accompanies the meter and decides not to test such meters it will be the choice of TANGEDCO

The make and type of meters to be procured by the consumer shall be notified in the website of TANGEDCO within one month from the date of issue of this order. Direction contained in this order shall become effective after two months from the date of issue of this order.

Based on the above a meeting was conducted in the Chamber of Chief Engineer/Materials Management on 22.03.2012 with the Chief Engineers, Superintending Engineer and EE/MRT of Chennai North and Chennai South Region to discuss about the modality to be followed in accepting and testing of consumer meters. The same was also discussed with the technically qualified firms i.e. whose samples meters passed the test in CPRI/Bangalore and by MRT in the present single phase and three phase tender floated by CE/MM.

In the above meeting the following were suggested;

a) New Services cab be effected only on supply of meters by the consumers.

b) Defective meters can be replaced from the Board's supply

c) Consumers can purchase the Meters as per the Boards specification and from the following companies who have technically qualified in the recent tender floated by TANGEDCO

   i) M/s, Larsen & Toubro Ltd., (Single Phase & Three Phase)

   ii) M/s, Landis + Gyr Ltd., (Single Phase & Three Phase)

   iii) M/s, Genus Power Infrastructure Ltd., (Three Phase)

   iv) M/s, Secure Meters Ltd., (Three Phase)

   v) M/s, Linkwess System (Single Phase)

   vi) M/s, Capital Power System (Single Phase)

d) The above approved suppliers have to offer a bulk quantity say 5000 / 10000 Nos. for inspection. The same has to tested by our MRT Engineers as is being done for the POs placed by Board. After testing the sealing report / Acceptance test report has to be communicated to all the regional Chief Engineers.

e) An area of 15 x 15 Sq. feet on rental basis has to be provided by TANGEDCO for each firm in each circle to stock the meters tested by the MRT Engineers at factory premises and to be supplied by the firm in the outlet for sealing.

f) The consumer has to pay the amount for the meter and get the bill from these outlets and handover the same to their respective section officers.

g) The section officers / any authorised person on producing the copy of the bill has to take over the meter from the shop and hand over the same to MRT for testing (only lamp test) and sealing.

h) MRT has to hand over the sealed meter to the section officer for effecting the service.

Hence, the Chief Engineer/Distribution are requested to confirm the availability of a room measuring 15 x 15 Sq. feed (*) for about 6 firms in each Circle Head Quarters / MRT / any other offices to enable the firms to establish their outlest and stock their meters. The Chief Engineers are also requested to offer any other suggestions in respect of the modality to be followed in accepting the meters from the consumers.

The report on the above may be sent immediately by return FAX/Email

Yours Faithfully,

Sd\22.03.12

CHIEF ENGINEER/

MATERIALS MANAGEMENT

(*) along with address
Copy to all the Superintending Engineers/EDCs
for necessary action and also to furnish the average
monthly requirement for new services only.

## மின்வாரிய புனல் மின் திட்டத்தில், ஒதுக்குபுறமாக பணியாற்றும் ஊழியர்களுக்கு ஒதுக்குபுற, புனல், குகை அலவன்ஸ் மற்றும் பணி ஊக்க ஊதியம் வழங்கும் வாரிய உத்திரவு

**TAMILNADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**
**(ABSTRACT)**

Allowances and Incentives - Revision of Payment of Remote Hydro/Cavern Allowance-cum Performance Incentive for employees working in Remote Hydel Station / Kadamparai Power House - Orders Issued

(SECRETARIAT BRANCH)

(Per) FB TANGEDCO Proceeding No. 26, Dated the 3rd May, 2012.
Chithirai, 21,
Thiruvalluvar Andu 2043.

**Read**

1) (Per) B.P. (FB) No. 23 (SB), dt. 20.03.2002
2) (Per) B.P. (Ch) No. 223 (SB), dt. 21.11.2009
3) (Per) B.P. (Ch) No. 224 (SB), dt. 21.11.2009
4) Minutes approved by the 24th meeting of the TANGEDCO held on 23.04.2012

PROCEEDING:-

In the Board's Proceedings first cited, orders have been issued for payment of Remote Hydro / Cavern Allowance-cum-Performance Incentive to the employees working in Remote Hydel Stations. While allowing the above allowance, the Hydro areas have been divided into four categories for the purpose of sanction of Remote Hydro Allowance based on their relative remoteness climatic condition and other available facilities such as Medical, Educational and Communication. The Remote Hydro Allowance was sanctioned at the following rate against each category:-

| Category | Rate |
|---|---|
| Category - I | 20% of Basic Pay |
| Category - II | 15% of Basic Pay |
| Category - III | 10% of Basic Pay |
| Category - IV | Nil |

The Cavern Allowance was sanctioned to the employees working in Kadamparai Power House at the rate of 10% of Basic Pay since it it located in a Cavern.

2) Revision of wages was ordered with effect from 01.12.2007 and the Revision of Allowances / Special Pay was given effect to from 01.09.2009 to the employees / Officers as in the reference second and third cited. But, the remote Hydro / Cavern Allowance-cum-Performance Incentive was not revised. It has been represented to revise the Remote Hydro / Cavern Allowance-cum-Performance Incentive to the employees working in the Hydro Generation areas.

3) After careful consideration, the TANGEDCO hereby revise the Remote Hydro / Cavern Allowance-cum-Performance Incentive in the Revised Pay at the following rates against each category as in the Annexure with effect from 01.09.2009:-

| Category | Rate |
| --- | --- |
| Category - I | 20% of Basic Pay + Grade Pay |
| Category - II | 15% of Basic Pay + Grade Pay |
| Category - III | 10% of Basic Pay + Grade Pay |
| Category - IV | Nil |

4) The Cavern Allwance shall also be sanctioned at the rate of 10% of Basic Pay + Grade Pay in the Revised Pay to the employees working in Kadamparai Power House and Pykara Ultimate Stage Hydro Electric Project (PUSHEP). The other conditions for payment of revised Remote Hydro / Cavern Allowance-cum-Performance Incentive as ordered in the Board's proceedings first cited remains unaltered.

5) The Arrears of Remote Hydro / Cavern Allowance-cum-Performance Incentive for the period from 01.09.2009 to 30.04.2012 (32 Months) may be paid in two equal monthly instalments as shown below:-

i) 1st instalment in June 2012

ii) 2nd instalment in July 2012.

6) The expenditure sanctioned in para-3 above shall be debited to "TANGEDCO Funds - Revenue Expenses - 75,408 - Salaries - Other Allowances - Remote Hydro/ Cavern Allowance-cum-Performance Incentive.

7) The receipt of the Board's Proceedings shall be acknowledged.

**(BY ORDER OF THE BOARD)**

**A.S. PASUPATHI**
**SECRETATY.**

## 13 சதவீதம் மின் கட்டணத்தை உயர்த்திய கல்கத்தா மின் விநியோக கம்பெனி

கல்கத்தா மின் வாரிய ஒழுங்குமுறை ஆணையம் கல்கத்தா மின் விநியோக கம்பெனியான சஞ்சீவ் கோகனே குழுமம் 13 சதவீத மின் கட்டண உயர்வு அதாவது 69 காசுகள் உயர்த்தி 1 யூனிட் 5 ரூபாய் .88 பைசா மின் கட்டணமாக 2011-2012 இல் வசூலிக்க அனுமதி அளித்துள்ளது. இந்த அனுமதியானது கம்பெனியின் வேண்டுகோள் அடிப்படையில் 1 யூனிட் 5 ரூபாய் 19 காசுகளில் இருந்து 5 ரூபாய் 88 காசுகள் உயர்த்த வேண்டுமென்ற அனுமதித்துள்ளது. இதனால் ஹவ்ரா, ஹுக்ளி பகுதியில் வாழும் மக்களுக்கு மின் கட்டணம் செங்குத்தாக உயர உள்ளது. இப்பகுதியில் உள்ள 25 லட்சம் மின் நுகர்வோர்கள் சராசரியாக 13 % அதாவது 5 ரூபாய் 88 காசுகள் செலுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. அதாவது மிகக் குறைந்த மின்சாரத்தை நுகரும் (அதாவது 30 யூனிட்களுக்கும் குறைவாக) நுகர்வோர்களும் 2 ரூபாய் 86 காசுகளில் இருந்து 2 ரூபாய் 96 காசாக மின் கட்டணத்தை செலுத்த வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. மாதத்திற்கு 300 இல் இருந்து 500 யூனிட் வரை பயன்படுத்துங்ம நுகர்வோர்களுக்கு சராசரியாக 10 சதம் மின் கட்டணம் உயர்வு அதாவது 52 காசுகளில் இருந்து 62 காசுகள் வரை உயர்வு என்பது ஏற்பட்டுள்ளது.

## ANNEXURE - I
## List of areas Eligible for Remote Hydro / Cavern Allowance

| Sl. No. | Category | Hydro Stations | Rates |
|---|---|---|---|
| i) | Category - I | Upper Bhavani Pump House, Parsons Valley, Porthimund, Pykara Powr House, Kundah Power House, V & VI, Sholayar Power House-I, PUSHEP, Kadamparai, Kadamparai Power House, Kodayar Power House-I, Kodayar Upper Camp, Kuttiar Pump House, Highway Camp and Camps and Quarters, Dams, Valve House, Forebays and Guest House relating to these Power Houses. | 20% |
| ii) | Category - II | Avalanche, Emerald, Sandinalluh, Glenmorgan, Moyar Power House, Singara Power House, Maravakandy Power House, Masinagudi Camp, Kundah Power House-II to IV, Mukurthi Mini Power House, Sholayar Power House-II, Upper Aliyar Camp including Punachi Power House, Kodayar Power House-II, Kodayar Power Camp, Eravangalar, Vanniar, Manalar, Servalar Power House and Camps and Quarters, Dams, Valve Houses, Forebays and Guest Houses relating to these Power Houses. | 15% |
| iii) | Category - III | Kundah-I, Pykara Micro Hydel Power House, Kudah Bridge Camp and Central Office, Athikadavu Camp, Aliyar Power House, Sarkarpathi Power House, Attakaatti Camp and Central Office, Periyar Power House, Suruliyar Power House, Papanasam Power House, Sathanur Power House and Camps and Quarters relating to these Power Houses, Dams, Valve Houses, Forebays and Guest Houses relating to these Power House. | 10% |
| iii) | Category - IV | 1) SE/Gen/Erode Office<br>2) SE/Gen/Tirunelveli Office<br>3) Barrage PH-I to IV<br>4) Mettur Dam and Mettur Tunnel PHs.<br>5) Vaigai Dam Micro Hydel<br>6) Lower Bhavani RBC<br>7) Thirumurthy Mini Power House | NIL |

// TURE COPY//

SECTION OFFICER

# தணிக்கைக்குழு அறிக்கையும் விவசாயிகள் எதிர்ப்பும்

கே. விஜயன்

மத்திய தணிக்கை கட்டுப்பாட்டு குழு தமிழக மாநிலத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களில் வரவு செலவுகளை தணிக்கை செய்து அறிக்கையை வெளியிட்டுள்ளது. அறிக்கையில் தமிழகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்கள் 53 ஆயிரம் கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்க பட்டுள்ளது. அதில் குறிப்பாக மின் வாரியம் 11 ஆயிரம் கோடி ரூபாய் வரை இழப்பீடு ஏற்பட்டதற்கு காரணம் மின் வாரியம் விவசாயிகளுக்கு அளித்த இலவச மின்சாரத்திற்கு சரிவர கட்டணம் என்பது நிர்ணயிக்கப்படாதது தான் காரணம் என்று குறிப்பிட்டுள்ளது.

2007-08 முதல் 2010-11 ஆம் ஆண்டு வரை விவசாய மின் இணைப்பிற்கு ஒரு குதிரைத்திறன் சக்திக்கு ரூ.50 என்று 5 குதிரைத்திறன் சக்திக்கு ரூ.250 வீதம் மின் கட்டணம் இருபது லட்சம் விவசாய மின் இணைப்புகளுக்கு மாநில அரசு வழங்கி வருகிறது. இதனால் மின் வாரியத்திற்கு விவசாயிகளிடமிருந்து வர வேண்டிய முழுமையான மின் கட்டணம் வராமல் போகிறது. இதனால் மின் வாரியத்திற்கு இழப்பு உண்டானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தணிக்கைக்குழுவின் அறிக்கையை பார்க்கும் பொழுது தமிழக அரசு விவசாயிகளுக்கு இலவசமின்சாரம் அளிக்கும் கொள்கையினால்தான் மின்வாரியத்தின் முழுமையான இழப்பிற்கான காரணம் என்று ஒரு தோற்றத்தை உருவாக்கியுள்ளது. அதுதான் உண்மையா? மின்வாரியம் தனது நட்டக் கணக்காக 53 ஆயிரம் கோடி ரூபாய் காட்டியுள்ளது. விவசாயிகளுக்கு ஓர் ஆண்டிற்கு 1110 கோடி யூனிட் மின்சாரம் வழங்குவதாக மின்வாரியத்தின் கணக்கு தெரிவிக்கிறது.

மின்வாரியங்கள் தனது வரவு செலவுக்கணக்கில் துண்டு விழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதே போன்று மின்வாரியத்தின் ஏகபோக மின்சாரம் வழங்குவதை மாற்றி மற்றவர் களும் பங்கு கொள்ளும் கொள்கையை உருவாக்கு வதால் போட்டி உருவாகும். போட்டியில் மின் நுகர்வோர்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கிடைக்கும் என்று புதிய தேசிய மின் கொள்கை என்பது உருவாக்கப்பட்டது. இதனால் மின்சாரம் என்பது வணிகப்பொருளாக மாற்றப்பட்டது.

இது விவசாயத்திற்கும் பொருத்தப்பட்டது. இந்தியாவில் விவசாயம் தான் முதன்மையான தொழில் ஆகும். உணவுப்பாதுகாப்பு குறித்து அரசு கவலைப்பட வேண்டிய காலமாக இக்காலம் உள்ளது. சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட மின்சாரத்திற்கான மின் கட்டணம் மிகக்குறைந்த அளவில் இருந்தது. தமிழகத்தில் 1978 ஆம் ஆண்டுகளில் ஒரு யூனிட் மின்சாரம் 7 காசுகளுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. மறைந்த தமிழக முதலமைச்சர் எம்ஜிஆர் அவர்கள் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 7 காசிலிருந்து 9 காசாக உயர்த்தியதை ஏற்க முடியாது என்று தமிழ விவசாயிகள் போர்க்கோலம் பூண்டனர். துப்பாக்கி சூடு உட்பட நடந்ததில் சேலம் மாவட்டத்திலும் காஞ்சிபுரம் மாவட்டத்திலும் 10க்கு மேற்பட்ட விவசாயிகள் இறந்தனர். அதன் பின்பே எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு குதிரைத்திறன் கொண்ட மின்சாரத்திற்கு ரூ.50 என்று நிர்ணயம் செய்தார். பின்னர் ஆட்சிக்கு வந்த கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மின்சாரம் முழுமையும் இலவசம் என்று அறிவித்தார். இந்தியாவில் மூன்று மாநிலங்களில் மட்டும் தான் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்பது அளிக்கப்படுகிறது. ஆந்திரா, பஞ்சாப் மற்றும் தமிழகம் தான் அந்த மூன்று மாநிலங்கள்.

ஆந்திரா, பஞ்சாப் மாநிலங்களில் அளிக்கப் படும் மின்சாரத்திற்கு அந்த மாநில அரசுகள் முழுமையாக மின்சாரத்திற்கான கட்டணத்தை அம் மாநில மின் வாரியங்களுக்கு செலுத்தி விடுகின்றது. தமிழகம் மட்டும் தற்போதுதான் விவசாயிகளுக்கான ஒரு மின் இணைப்பிற்கு ரூ.250 என்பதை 1750 ஆக உயர்த்தியுள்ளது. விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மின்சாரம் ஒன்றும் அரசின் கருணையால் அளிக்கப் படுவது கிடையாது.

உணவுப்பாதுகாப்பு குறித்து பேசப்படும் காலத்தில் விவசாயிகளின் நிலை மிகவும் கவலைக்குரிய ஒன்று. விவசாய விளைபொருளுக்கு நியாயவிலை கிடைக்கவில்லை. வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியவில்லை. அதனால் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் தற்கொலை கள், உரத்திற்கு அளித்து வரும் மான்யக் குறைப்பு. விவசாய இடுபொருட்களின் விலை உயர்வு. விவசாயம் செய்ய முடியாத நிலை. இதனால் விவ சாயம் செய்யும் நிலப்பரப்பு குறைந்தது கொண்டே போகின்றது. கிராமங்கள் நகரங்களாக மாறும் நிலவியபாரங்கள், தொழிற்சாலை மிகுதியாவதால் நீர் ஆதாரம் குறைதல்.

நீர் நிலைகள் முழுவதும் அபகரிக்கப்பட்டு வருவதால் நிலத்தடி நீரையே சார்ந்து நிற்கும் நிலை. நிலத்தடி நீரை வெளியே கொண்டு வருவதற்கு மின்சக்தி அவசியம். அம்மின் சக்தி என்பது கட்டணம் உயர்த்தப்படும் நிலை ஏற்பட்டால் உணவுப் பாதுகாப்பு கேள்விக்குறியாக்ககம்படும்.

இவைகளை எல்லாம் தணிக்கைக்குழு கவனத்தில் கொண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டதா என்பது நமக்கு விளங்கவில்லை.

மின்சாரம் வணிகப் பொருளாக மாற்றப்பட்ட தனால் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மின்சாரம் குறைந்தபட்ச கட்டணமாக ஒரு யூனிட்டிற்கு 50 காசு நிர்ணயித்தல் வேண்டும். அனைத்து மின் இணைப்பு களுக்கும் மின் அளவி பொருத்துதல் வேண்டும் என்று மின்சார சட்டம் 2003 வலியுறுத்துகின்றது.

2010 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்துறை ஒழுங்குமுறை ஆணையம் அளித்த மின்கட்டண உயர்விற்கான உத்தரவில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கக் கூடாது என்று தெரிவித்துள்ளது. அதே கருத்தையே தணிக்கைக்குழு தெரிவித்துள்ளது ஏன் என்று விளங்கவில்லை.

இதே காலத்தில் தணிக்கைக் குழுவானது மின்வாரியத்தின் இதர செலவுகளை தணிக்கை செய்து இருக்கும். அக்கணக்கில் தமிழகத்தில் மின் பற்றாக் குறை ஏற்பட்டு அல்லறும் நிலையில் வெளி மாநிலங் களில் இருந்தும் சந்தையிலிருந்தும் மின்சாரம் அதிக விலை கொடுத்து வாங்கியிருப்பதும், அதனால் மின்வாரியம் நட்டத்திற்குள்ளானதைப் பற்றியும் தணிக்கைக்குழு வாய்திறக்கவில்லை.

தமிழ்நாட்டில் புதிய தேசிய மின்சாரக் கொள்கையினால் தமிழகத்திற்கு தேவைப்படும் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கு நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு செய்யவில்லை. 7 தனியார் மின் உற்பத்தி நிலையங்களை தமிழக அரசு நிர்மாணித்தது. அதன் மூலம் தமிழகத்திற்கு ஆண்டு தோறும் 720 கோடி யூனிட்டுகள் கிடைக்கின்றது. அதற்கு மின்வாரியம் செலுத்துகின்ற தொகை ஓராண்டிற்கு 10 ஆயிரம் கோடியைத் தாண்டுகின்றது.

இதே காலத்தில் மத்திய அரசுக்கு சொந்தமான பொதுத்துறை மின் நிலையங்களில் இருந்து 2200 கோடி யூனிட்டுகள் மின்சாரத்தை வாங்குவதற்கு செலவழிக்கப்படும் தொகை ஆறாயிரம் கோடி ரூபாய் ஆக உள்ளது.

11 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள கணக்கின் படி 2005 - 06 இல் ஒரு யூனிட் மின் சாரத்தின் கட்டணம் சராசரியாக 366 காசுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. அதே போன்று மின் சந்தையிலும் ஒரு யூனிட் மின்சாரம் 385 காசுகளாகத் தான் உள்ளது. இவைகளை தணிக்கைக்குழு கவனித்து ஆய்வு செய்திருந்தால் ஆண்டு தோறும் இந் ஏழு தனியார் நிறுவனங்களுக்கு 7000 கோடி ரூபாயை மின் வாரியம் கூடுதலாக அளித்துக் கொண்டு வருகின்றது.

தமிழக அரசானது சட்டமன்றத்தில் 2001-02 ஆம் ஆண்டில் தமிழக பொருளாதார நிலை குறித்த வெள்ளை அறிக்கையில் அன்றைய கால கட்டத்தில் மின்வாரியம் 3509 கோடி ரூபாய் மட்டும் தான் நட்டத்தில் இருந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில் இருந்து மின்வாரியம் ஏழு தனியார் மின் உற்பத்தி நிலையிங்களிடமிருந்து மின்சாரம் வாங்கிய வகையில் மட்டும் கூடுதலாக மின்வாரியம் அளித்த தொகை 56 ஆயிரம் கோடியைத் தாண்டுகின்றது.

விவசாயிகளுக்கு அளித்து வரும் மின்சாரத்தி னால் மின் வாரியத்திற்கு வர வேண்டிய தொகை ஆண்டு தோறும் 4000 கோடி ரூபாய் ஆகும். அதில் ஒரு தொகையை அரசு அளித்து வருகின்றது. ஆனால் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையானது இருபது லட்சம் விவசாயிகளுக்கான ஒன்றாகும்.

ஆனால் ஏழு தனியார் மின் உற்பத்தி நிறு வனங்கள் ஒரு சில நபர்கள் என்ற எண்ணிக்கையில் வாரியத்தினால் பலனடைபவர்கள்.

மத்திய தணிக்கைக்குழு 2ஜி ஸ்பெக்ட்ரம் தொடர்பான ஊழலை அம்பலப்படுத்திய ஒன்றுதான்.

ஆனால் தமிழக மின்வாரியத்தின் நட்டம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் செயல்ப்படுத்தி னால்தான் மின்வாரியம் நஷ்டமடைந்துவிட்டதாக அறிக்கை வெளிவந்துள்ளது. தனியார் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அதன் முதலாளிகளுக்கு மின்வாரியம் என்ற பொதுத்துறை சகாயத் தொகையாக வழங்குவதை மறைப்பதாகும்.

தணிக்கைக்குழு அறிக்கை முதலாளிகளின் நலனை பாதுகாப்பதாகவே உள்ளது.



# திசைகாட்டியாய் ஒரு மாநாடு

இந்திய நாட்டின் முதன்மை மாணவர் அமைப்பான இந்திய மாணவர் சங்கத்தின் 14 வது அகில இந்திய மாநாடு, வரும் 2012 செப்டம்பர் 4, 5, 6 மற்றும் 7 ஆம் தேதிகளில் தமிழகத்தின் மதுரை மண்ணில் நடைபெற உள்ளது. செப்டம்பர் 4 ஆம் தேதியன்று ஒரு இலட்சம் மாணவ மாணவிகள் கலந்து கொள்ளும் மாபெரும் பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது.

செப்டம் 5, 6, 7 தேதிகளில் தேசம் முழுவதிலிருந்து 48 லட்சம் மாணவர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் 750 பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாடும் நடைபெற உள்ளது. 1970 ல் துவங்கப்பட்ட இந்திய மாணவர் சங்கம் 40 ஆண்டுகளில், எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வேலை என்ற இலட்சியத்தை முன்வைத்து, படிப்போம், போராடுவோம் என்ற முழக்கதோடு செய்யப்பட்டு வந்துள்ளது. இன்றைக்கும் இந்தியக் கல்வியின் முன் எழுந்துள்ள சவால்கள் குறித்து விவாதிக்கவும், தாராளமய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக இந்திய தொழிலாளி வர்க்கத்தோடு இணைந்து போராட வலுவான மாணவர் அமைப்பினை உருவாக்குவது குறித்தும் இம்மாநாட்டில் விவாதித்திட உள்ளது. மாணவர்கள் என்றாலே, எதைப்பற்றியும் கவலைப் படாதவர்கள், தங்களை பற்றியே கூட அக்கறை இல்லாதவர்கள் என ஊடகங்கள் கட்டியமைத்துள்ள பிம்பங்களை உடைத்தெறிந்து, நாங்கள் இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட மாணவர் பரம்பரையின் வாரிசுகள் என உரக்க முழக்கமிட உள்ளனர். தேசத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையான கல்வியை பற்றி அக்கறையோடு விவாதிக்க உள்ளனர் ஏனெனில்.....

கல்வியைப் பற்றி பேசுகின்றபோது, முழு சமூகத்தைப்பற்றியும் பேசுகின்றோம். என்றார் புகழ்பெற்ற கல்வியாளர் பாவ்லோஃபிரையர்.

மனித வளத்தை மேம்படுத்தாமல், எந்த ஒரு நாடும், தனது இதர வளங்களை தேச வளர்ச்சிக்கு குறிப்பாக பயன்படுத்த இயலாது. மனித வளத்தை மேம்படுத்த கல்வி மிகவும் அவசியம். இயற்கை வளங்களும், கனிம வளங்களும், அவற்றோடு கோடிக்கணக்கான மனித வளமும் கொட்டிக் கிடக்கும் இந்தியா போன்ற நாட்டிற்கு நல்ல குறிக்கோளோடும், இலட்சிய தாகத்துடன் கூடிய கல்வி அமைப்பு முறை தேவை. அப்படியான கல்வி அமைப்பு முறையானது, இயற்கை வளங்களையும், கனிம வளங்களையும், மனித வளத்தோடு இணைத்து சிறப்பாக பயன் படுத்துவதற்குரிய ஆற்றலையும், வழிமுறைகளையும் நாட்டிற்கு வழங்கும்.

அதனால் நமது நாட்டு விடுதலை பெற்றவுடன் நிகழ்த்திய உரையில், முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளில், நாட்டு மக்கள் அனைவரையும் எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றுவோம் என சூளுரைத்தார். அப்போது, நாட்டின் எழுத்தறிவு பெற்றோர் விகிதம் 14% மட்டுமே. ஆனால் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பிறகு தேசத்தின் எழுத்தறிவு விகிதம் 74% ஆகும் நேரு சொன்னதைப்போல 10 ஆண்டுகள் அல்ல 65 ஆண்டுகளுக்கு பிறகும். முழு எழுத்தறிவு பெற்ற நாடாக இந்தியா மாறவில்லை, ஆனால் விடுதலை பெற்ற 10 ஆண்டுகளில் மக்கள் சீனம் இதை சாதித்து காட்டியது. இன்னும் ஆரம்ப கல்வி கற்க பள்ளி செல்லும் வயதில் உள்ள குழந்தைகளில் 2 1/2 கோடி குழந்தைகள் இந்தியாவில் பள்ளி செல்வதில்லை. பெற்றோரின் வறுமை, அருகில் பள்ளி இல்லாதது, வேலைக்காக இடம் பெயருதல், உள்ளிட்ட காரணங்களால் இது நிகழ்கிறது.

இது தவிர பள்ளிக்கு செல்லும் மாணவர்களில் இடைநிற்றல் அதிகமாக உள்ள நாடும் இந்தியாதான் உயர்கல்விக்கு செல்லும் வயதில் உள்ள மாணவர்களில் வெறும் 15 % பேர்தான் உயர் கல்வி நிறுவனங்களில் காலடி வைக்கின்றனர். நமக்கு பக்கதிலுள்ள வங்காள தேசம், இலங்கை மற்றும்

பாகிஸ்தானில் கூட இதைவிட அதிகமானோர் உயர் கல்விக்கு செல்கின்றனர்.

மிகக்குறைவான உயர்கல்வி நிறுவனங்கள், பட்டபடிப்பிற்கு ஆகும் பெரும் செலவு போன்றவை உயர்கல்விக்கு செல்வோர் எண்ணிக்கையை மட்டுப்படுத்துகின்றன.

இதுபோன்ற, கடும் பிரச்சனைகள் இந்தியக் கல்வியில் நிலவி வந்தாலும் அதைப் பற்றி எந்த கவலையும்படாதவர்களோகவே, மத்திய மாநில ஆட்சியாளர்கள் இருந்து வந்துள்ளனர்.

இந்திய கல்வியில் நிலவும் பிரச்சனைகள் பற்றி ஆராயவும், அனைவருக்கு கல்வியை கொண்டு சேர்க்க தேவையான பரிந்துரைகள் செய்யவும் 1962 ல் அமைக்கப்பட்ட கோத்தாரி கல்விக்குழு பள்ளிக்கல்வி மற்றும் உயர்க்கல்வி வளர்ச்சிக் பட்ஜெட்டில், தேசிய வருமானத்தில் 6% செலவிடப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

அதன் பிறகு 1986 ஆண்டு மத்திய அரசு வெளியிட்ட தேசிய கல்விக் கொள்கையும் இதையே வலியுறுத்தியது ஆனால், இதுவரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி)ல் 6 % செலவிடப்படவே இல்லை. ஐந்தாண்டு திட்டங்களை எடுத்து கொண்டாலும், முதல் ஐந்தாண்டு திட்டத்தில் 7.9 சதவீகிதமாக இருந்த கல்விக்கான ஒதுக்கீடு குறைந்தும், உயர்ந்தும் வந்து பதினொராவது திட்டத்தில் 6 சதவிகிதத்தை தான் எட்டியுள்ளது. அனைவருக்கும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்டாலும் அதற்கென தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

இதையெல்லாம் தாண்டி, இன்றைக்கு மத்திய - மாநில அரசுகள் கடைபிடித்து வரும் புதிய தாராளமய பொருளாதார கொள்கைகள் இந்தியக் கல்வியையே சீரழித்துள்ளன. பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி இரண்டிலும் கல்வி வியாபாரம் கொடிகட்டிப் பறக்கிறது. கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை கொஞ்சம், கொஞ்சமாய் குறைத்துக் கொண்டே, தனியாரை ஊக்குவிக்கும் வேலையை செய்து வருகின்றன. பொதுக் கல்வியை பலவீனப்படுத்தி, அனைவரையும் தனியார் கல்வி நிலையங்கள் நோக்கி துரத்தியடிக் கின்றன. இன்று நாட்டில் மொத்தமுள்ள உயர்கல்வி நிலைங்களில், 64 % தனியார் கல்வி நிறுவனங்களே. இவையும் இன்று, ஆந்திரா, மகாராஷ்டிரம், தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டும் 60% தனியார் கல்லூரிகள் உள்ளன.

காசு இருந்தால் மட்டுமே கல்வி என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதனால், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான கல்வி என்பது கேள்விக் குறியாக்கப் பட்டுள்ளது. தனியார் கல்வி நிலையங்கள் சமூக நீதியை குழி தோண்டி புதைத்து வருகின்றன. இக்கல்வி நிறுவனங்களை முறைப்படுத்துவதற்கும், சமூக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கும் எந்த ஏற்பாடும் இல்லை. இதனால் கல்வியில் பல படி நிலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் பள்ளிக்கல்வியில் இதை நாம் கண்கூடாக கண்டு வருகின்றோம்.

அரசு பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகள், சிபிஎஸ்சி பள்ளிகள், உறைவிட பள்ளிகள், சர்வதேசபள்ளிகள் என பல படிநிலை பள்ளிகள் உருவாகி கல்வியின் உயர் நோக்கத்தையே சீர்குலைத்துள்ளன. அரசு பள்ளிகளில் போதிய ஆசிரியர் இன்மை நல்ல கற்றலுக்கான சூழல் இன்மை என இல்லாமைகளின் இருப்பிடமாக மாறியுள்ளன.

உயர் கல்வியின் நிலையும் இது தான் 6 அரசு பொறியியல் கல்லூரிகள், 525 தனியார் பொறியியல் கல்லூரிகள் மற்றும் 62 அரசு கலைக் கல்லூரிகள், 620 தனியார் கலைக் கல்லூரிகள் என்ற நிலையே தமிழகத்தில் உள்ளது. புதிய கல்லூரிகளுக்கான அரசு அறிவிப்புகள் பல்கலைகழக உறுப்புகல்லூரிகள் என்ற அளவில் அரசின் பொறுப்பை தட்டிக் கழிக் கின்றவையாக உள்ளது. கடந்த கல்வியாண்டில் தனியார் பொறியில் கல்லூரிகளில் மட்டும் ஒரு லட்சம் இடங்கள் காலியாக கிடந்தன. பொறியியல் மீதான ஆர்வம் குறைந்ததால் அல்ல. கல்வி கட்டணம் கட்ட பணம் இல்லாததால். இந்நிலையில் மத்திய அரசு, கல்வி வியாபாரத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை, இந்தியா விற்குள் அனுமதிக்க தயாராகி வருகின்றது. தனியார் அரசு, மக்கள் (PPP) என்ற புதிய வழிமுறையையும் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் படி 11 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இலக்குகளை அடைய 12 % நிதியையே ஒதுக்கியது. மீதி நிதி PPP மூலம் திரட்டப்படும் எனக் கூறியது. சாதாரண ஏழை - எளிய மக்களுக்கு கல்வியை மறுத்து, கல்வி வியாபாரத்தை ஊக்குவிக்கும் மத்திய மாநில அரசுகளின் செயல்பாடுகளை எதிர்த்து இந்திய மாணவர் சங்கம் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றது. அத்தகைய போராட்டங்களை முன்னிலும் வீரியத் தோடு முன்னெடுக்கவும், கல்விப் பிரச்சனைகளை விவாதிக்கவும், இந்திய கல்வியை பாதுகாக்க, சமூக அக்கறையோடு மாணவர்களை அணி திரட்டிடவும் பாதை வகுக்கும் மாநாடாய் இந்திய மாணவர் சங்க அகில இந்திய மாநாடு மதுரையில் நடைபெற உள்ளது.

**- கே.எஸ். கனகராஜ்**
மாநில தலைவர்
இந்திய மாணவர்சங்கம்

## மணமக்களுக்கு வாழ்த்துக்கள்

திருநெல்வேலி கிராமப்புற கோட்டம், நாங்குநேரி, கட்டுமானப் பிரிவு தோழர் சுவிசேஷமுத்து- எஸ். எஸ்தர் அவர்களின் மகன்

S. செல்வன், TTC,B.Lit

T. ஜென்சி, M.Com. Med

இருவரின் திருமணம் 25.4.2012ல் நடைபெற்றது. மத்திய அமைப்பின் சார்பில் தோழர்கள் எஸ்.முத்துக்குமாரசாமி, ஜி. கமலநாதன், எஸ். அருணாசலம், எஸ். பூலுடையான், பி. சுடலைக்கண்ணு, டி.தளபதி, பி. பெருமாள் ஆகியோர் நேரில் சென்று மணமக்களை வாழ்த்திய போது ரூ. 300/- நன்கொடையாக அளித்தனர்





## வாழ்த்துகிறோம்

மேட்டூர் மின்பகிர்மான வட்டம், மேட்டூர் கோட்டம், பூலாம்பட்டி பிரிவில் கம்பியாளராக பணிபுரிந்த தோழர் ஐமண்ணன் அவர்கள் கடந்த 29.2.2012 அன்று பணி ஓய்வுபெற்றார். திட்ட தலைவர் கே. சுந்தரராஜன், செயலாளர் எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் நேரில் சென்று பணிஓய்வு பெற்ற தோழரை வாழ்த்திய போது மின்கதிர் வளர்ச்சிநிதியாக ரூ. 500/- அளித்தார். வாழ்த்துக்கள்.

## குடும்பநல நிதி வழங்கும் நிகழ்ச்சி

திருப்பூர் மின்வட்டம், பெரியபாளையம் பிரிவு அலுவலகத்தில் பணியாற்றி மின்விபத்தில் உயிரிழந்த நமது சங்க தோழர் செல்வராஜின் குடும்பத்திற்கு மத்திய அமைப்பின் குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 10,000க்கான காசோலையை மறைந்த தோழர் செல்வராஜியின் துணைவியார் திருமதி பவளக்கொடியிடம் திருப்பூர் கிளையின் செயலாளர் தோழர் து. கோபாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கினார்.





## வாழ்த்துக்கள்

தோழர் டி.ஏ. குப்புசாமி, திருப்பூர் வட்டம், அவிநாசி கோட்டம், ஆர்.கே. நகர் பிரிவு அவர்கள் 30.4.2012 அன்று ஓய்வு பெற்றார். மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 500 /- அளித்தார் வாழ்த்துக்கள் (டி. கோபாலகிருஷ் ணன் மூலமாக)



## வாழ்த்துக்கள்

தோழர் வி. கண்ணன், கம்பியாளர், மானாமதுரை, சிவகங்கை மின் வட்டக் கிளை அவர்கள் நமது சங்கம் போராடி பெற்று தந்த பதவி உயர்வினை வாழ்த்தி மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 300/- அளித்தார். (ஆ. மரியசெபஸ்தி மூலமாக) வாழ்த்துக்கள்

## நன்கொடைகள்

தோழர் எச். வாசிதுல்லா, வருவாய் மேற்பார்வையாளர், தி.நகர் மையம், மத்திய சென்னை கிளை அவர்கள் 31.12.2011 அன்று ஓய்வுபெற்றார். நன் கொடையாக ரூ. 100/- அளித் தார்.

மத்திய சென்னை, துணை பண்டசாலை, மாம்பலம் மறைந்த தோழர் ஜி. சுப்பிரமணி அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி அவர்கள் நமது சங்கம் செய்த உதவியை பாராட்டி ரூ. 100/- அளித்தார். வாழ்த்துக் கள் (டி.சி. கமலக்கண்ணன் மூலமாக)

ஆசிரியரும், வெளியிடுபவரும் எஸ். எஸ். சுப்பிரமணியன், எண் 27, மகுதி தெரு, சேப்பாக்கம், சென்னை-5, போன் 2854 85 29. அச்சிட்டோர் பாட்டாளிகள் அச்சகம், பெரம்பூர், சென்னை 600 012. போன் 2663 37 71

Registration Number TN/CH/(C)/189/12-14
Licence to Post Without prepayment TN/PMG(CCR) WPP - 311/2012-2014
Registrar News Paper of India No.30504/77 Date of Posting 3&4



தூத்துக்குடி அனல் மின்நிலையக் கிளை
ஆண்டு பேரவை 14.4.2012

செங்கல்பட்டு
கோட்ட மாநாடு
25.4.2012





விருதுநகர் மேற்பார்வை பொறியாளரை
கண்டித்து செங்கல்பட்டில் ஆர்ப்பாட்டம்



விருதுநகர் கிளையின்
ஆண்டு பேரவை 20.5.2012